கனி 10

புதிய

# தேடல்

அக்டோபர் 2025

புதிய பாதையில் விடியலாய் குழித்துறை மறைமாவட்டம்



## இணைந்து பங்கேற்போம் ஒன்றித்து வாழ்வோம்

ஆண்டு சந்தா : 130 தனிப்பிரதி : 10


IATA
SINCE 1990
Mangalam
Travel & Tours
The Ultimate Travel Professionals
WE SERVE
Flight Tickets (Domestic & International )
Visa Services GCC & Schengen (all categories)
Holidays (In Bound / Out Bound )
Travel Insurance
PCC Certificate
Foreign Exchange
MICE
Pligrimage Tours(Europe/Holyland)
Passport Services
Hotel Bookings (Domestic & International)
Embassy Attestation Services
Cruise Lines / Ferry Tickets
Airport Assistance All Over The World
Airport Lounge Bookings, Meet & Greet Services
Bus/ Train Bookings
Eurail /swiss Pass
Un-accompanied Child Travel
Educational Travel Assistance
Car Rentals Throughout India
B2B & B2C Services
ACCREDITATIONS
MINISTRY OF TOURISM GOVERNMENT OF INDIA
TAFI THE WAY FORWARD
TAAI SINCE 1951
IATO INDIAN ASSOCIATION OF TOUR OPERATORS
kerala God's Own Country
IATA
TAFI
MANGALAM Holidays (INDIA)PVT LTD
(Our Sister Concern)
MARTHANDAM BRANCH
Vasantham Tower, Ground Floor, Main Junction, Marthandam - 629 165
Email : mdm@mangalamtravel.com
Web : www.mangalamtravel.com
Contact : +91 95855 41102 | +91 70920 33117 | 04651 - 273115
OUR BRANCHES
TRIVANDRUM(HO) | COCHIN | CHENNAI | TRICHY | MADURAI | NAGERCOIL

## புதிய தேடல்

*இது ஒரு குழித்துறை மறைமாவட்ட வெளியீடு*

*ஆசிரியர்*

அருள் முனைவர். **இரா.பால் ரிச்சார்டு ஜோசப்**

*ஆசிரியர் குழு*

அருள்பணி. **ஜா. ஜாண் ஜிஜோ** (துணைத்தலைவர்)

அருள்பணி. **பெ. வெலிங்டன்** (செயலர்)

திரு. **மு. அருளப்பன்** (துணைச் செயலர்)

அருள்பணி. **பி. ஜோஸ் பிரசாந்த்** (பொருளர்)

அருள்பணி. **ஜாக்சன்**

**குமரி ஆதவன்**

திரு. **ஜெயசிங் ராபின்சன்** (வழக்கறிஞர்)

அருள் முனைவர். **எ. ஒய்சிலின் சேவியர்**

அருள்பணி. **க. சுனில்**

திரு. **ஞா. எலியாசு**

திருமதி. **டி. மேரி விஜிலா**

*தொடர்பு முகவரி*

**புதிய தேடல்**

**ஆயர் இல்லம், உண்ணாமலைக்கடை**

**மார்த்தாண்டம், அஞ்சல் பெட்டி எண்:1**

**அஞ்சல் எண் – 629 179**

**கைபேசி : 9443693505, 8525032383**

**மின் அஞ்சல்: newputhiathedal@gmail.com**

**தனிப்பிரதி : ₹ 10**

**ஆண்டு சந்தா : ₹ 130**

**ஆயுள் சந்தா : ₹ 2000**



### விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| பலவண்ண அட்டை வெளிப்பக்கம் | : ₹ 12000 |
| பலவண்ண அட்டை உள்பக்கம் | : ₹ 7000 |
| முழுப்பக்கம் கறுப்பு | : ₹ 2000 |
| அரைப்பக்கம் கறுப்பு | : ₹ 1000 |




## *ஆசிரியரின் அன்பு வரிகள்*


அருள்முனைவர்,

**இரா. பால் ரிச்சார்டு ஜோசப்**


**புதுப்பிறப்படைய புதிய தேடலின் அன்பு வாசகர்களுக்கு அன்பின் வாழ்த்துகள்...**

***"நலிந்தபோது உதவத்தானே நண்பர்கள்!***
***சோகத்தில் கைக்கொடுக்கத்தானே சொந்தங்கள்!***
***வருத்தத்தில் வருடித் தரதானே சுற்றங்கள்!***
***உள்ளத்தை உந்தித் தரதானே உடன்பிறப்புகள்!"***

எறும்புகள் இணையும்போது அவற்றின் மூளை ஒரே மூளையாக திரண்டு விடுகின்றது என்கிறது அறிவியல் கோட்பாடு. "எறும்புபோல சுறுசுறுப்பு" என்பது உழைப்பை மட்டும் காட்டவில்லை மாறாக ஒருங்கிணைந்து பங்கேற்பதையும் ஒன்றித்து வாழ்வதையும் காட்டுகிறது.

ஒன்றித்து வாழ்தல் என்பது மிகவும் உயர்ந்த நிலை. அது இணைந்து பங்கேற்பதால் இயல்பாக நிகழ்கின்றது. காரணம், ஒன்றித்து பங்கேற்பவர்களுக்கு கட்டளைகள் தேவையில்லை, வேண்டுகோள் போதுமானது. குறிப்புகள் தேவையில்லை, குறிப்பறிதல் தேவையானது.

பூமி சுற்றும்போது நம்மைச் சுற்றியுள்ள பொருள்களும், நாம் இருக்கும் வீடும், நாம் பணிபுரியும் அலுவலவங்களும்கூட சேர்ந்து சுற்றுவதால்தான் நாம் விழாமல் இருக்கின்றோம், இணைந்து வாழ்கின்றோம்.

இணைந்து பங்கேற்கின்றபோது சொற்களுக்கு முன்னாலே செயல்கள் ஆரம்பித்து விடுகின்றது. அது தென்றல் வருகின்றபோது மொட்டுகள் இயல்பாக மலர்வதுபோல் நிகழ்ந்து விடுகின்றது.

நாம் சேர்ந்து வாழும்போது பகிர்ந்துக் கொள்கிறோம் அன்பையும், மகிழ்வையும். அவ்வாறே ஏமாற்றதையும், சோகத்தையும், வறுமையையும், இழப்பையும். இவ்வாறு ஒரு குடும்பத்திற்கோ ஒரு சமூகத்திற்கோ ஏற்படும் சுமை பரவலாகி பாதிப்புக் குறைகின்றது. மகிழ்ச்சியோ பெருகி பன்மடங்காகிறது நம் எண்ணங்களை வளமையாக்கி இணைந்து பங்கேற்போம் ஒன்றித்து வாழ்வோம்.



# ஆயரின் அமுத மொழிகள்

**புத்துலகம் படைக்க புதிய தேடல்
வாசகர்களுக்கு அன்பின் நல்வாழ்த்துகள்!**

*"இணைந்து சாதிக்கும்வரை ஒன்றித்து
முயற்சிப்பதே குறிக்கோளாக இருத்தல் வேண்டும்"*

மனித வாழ்க்கை மழையாக இருந்தால் துளிர்ப்பிக்கும், தென்றலாக இருந்தால் மலரச் செய்யும், தேனியாக இருந்தால் மகரந்த சேர்க்கையை நிகழ்த்தும். இவ்வாறு ஒன்றோடொன்று இணைந்து பங்கேற்பதால் வாழ்க்கை வசப்படும்.

"தனி மரம் தோப்பாகாது" "ஒரு கையால் ஓசை எழும்பாது" என்றெல்லாம் நம் முன்னோர்கள் குறிப்பிடுவதுண்டு. உலகில் எதுவாக இருந்தாலும் ஒன்றிணைகிறபோதுதான் அனைவருக்குமான சாதகம் பிறக்கின்றது, சாதனை நிகழ்கின்றது.

சேர்ந்து வாழ்தல் என்பது தான் படைப்பின் அடிப்படை தத்துவம். விலங்குகள், பறவைகள்கூட கூட்டமாய் வாழ்கிறது, பயணிக்கிறது. இயற்கையின் இரகசியத்தை ஒவ்வொரு நாளும் புதுப்பிக்கின்றது.

*"இணையான வெண்புறா
தனியாக சென்றதே
வன வேடன் வீசிய வலைதன்னில் விழுந்ததே
இனம் யாவும் சேர்ந்துதான்
அதை மீட்டு வந்ததே
கதையான போதிலும்
கருத்துள்ள பாடமே!"*

என்பார் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.

நாம் இணைந்து பங்கேற்றால் வாழ்க்கை சிறப்படைவதோடு நம்முடைய இலட்சியங்களும், வாழ்க்கைத் தத்துவங்களும் உறுதிப்பெற்று வாழும். தற்கால சூழலில் சிறுபான்மை சமூகங்கள் பல பாதிப்புகளை சந்திக்கின்றன. இந்த நிலை மாறவேண்டுமென்றால் இணைந்து ஒன்றித்து பயணிக்க வேண்டும்.

நம் தலைவர் இயேசுவும் பாதிக்கப்பட்ட மக்களைப் பார்த்து ஒன்றித்து வாழ வலியுறுத்தினார், வழிகாட்டினார். அதையே திருத்தூதர்களும் பிரதிபலித்தார்கள். இதன் உண்மையை உணர்ந்து இணைந்து பங்கேற்போம் ஒன்றித்து வாழ்வோம்.

கிறிஸ்துவில் உங்கள் அன்புள்ள,

மேதகு ஆயர் **ஆல்பர்ட் G.A. அனஸ்தாஸ்**,
குழித்துறை மறைமாவட்டம்.

கனி 10 அகல் 15 அக்டோபர் 2025

*எண் படைப்பு*


1. ஆசிரியரின் அன்பு வரிகள்
2. ஆயரின் அமுத மொழிகள்
3. ஏழைகள் ஏற்றம் பெறவே திருஅவையும் சட்டங்களும்
4. யார் புனிதர்?
5. நம் செயல்களால் நினைவு கூறப்படுவோர்
6. திசை மாறும் கல்விக் கொள்கைகளும் கரைந்து போகும் காமராசரின் கல்விக் கனவுகளும்
7. இந்தியாவும் எளியோருக்கான சட்டங்களும்
8. போர் நிழலில் முதல் உலக ஒளி வரை புனித இரண்டாம் ஜான் பால்
9. தேச ஒற்றுமை தேசத்தின் வலிமை
10. இயற்கை மருத்துவத்தின் தேவை
11. அமைதியும் வளர்ச்சியும்
12. சிக்கனம் தேவை இக்கணம்
13. குமரி மாவட்டமும் புற்றுநோய் ஆபத்தும்
15. பணிக்குழுக்களின் சிறப்பு செயல்பாட்டு அறிக்கைகள்
16. ஆயரின் அலுவல்கள்



# ஏழைகள் ஏற்றம் பெறவே
# திருஅவையும் சட்டங்களும்

**Rev. Dr. ச. சேவியர் பெனடிக்ட் DCL**
(மறைமாவட்ட முதன்மைப் பணியாளர் குழித்துறை மறைமாவட்டம்)

ஏழைகளுக்கு சட்டத்தைப்பற்றிய விழிப்புணர்வு வேண்டும்; சமூகத்தில் நலிவடைந்தவர்களின் உரிமைகள் பாதிக்கப் படும்போது அவர்கள் இலவச சட்ட உதவியைப்பெற வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என்பதற்காக **"இந்திய அரசு சட்ட சேவைகள் அதிகார சபை சட்டம்"** 1987-ல் இயற்றப்பட்டது. இந்த சட்டத்தின்கீழ் தேசிய அளவிலான சட்ட சேவைகளை மேற்பார்வையிடுவதற்கும், ஒழுங்கமைப்பதற்கும் **"தேசிய சட்ட சேவைகள் ஆணையம்"** அமைத்து 1995 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9ஆம் நாளிலிருந்து செயல்பாட்டிற்கு வந்தது. எனவே, ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 09 ஆம் நாள் தேசிய சட்ட சேவைகள் தினமாகக் கொண்டாடப்படுகின்றது. இக்கட்டுரையில் நலிவடைந்தோர் நலம்பேண திருஅவையும் திருச்சட்டமும் காட்டும் வழிகளைக் காண்போம்.



துவக்க காலத் திருஅவையில் ஏழைகளும், நலிவுற்றோரும் திருஅவையின் நம்பிக்கையாளர்களால் மாண்போடு பாதுகாக்கப்பட்டனர். மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த மறைசாட்சி புனித லாறன்ஸ் **"ஏழைகள் திருஅவையின் சொத்துக்கள்"** என்று உரோமை பேரரசர் வலேரியனுக்கு எடுத்துரைத்தார். ஐந்தாம் நூற்றாண்டின் துவக்கத்தில் வாழ்ந்த புனித பொன்வாய் அருளப்பர், **"ஏழைகளுக்கு கொடுப்பது இறைவேண்டலின் சிறகு. இந்த சிறகு இருந்தால்தான் இறைவேண்டல்கள் இறைவனை நோக்கி எழும்"** என்று கிறித்தவ நம்பிக்கையாளருக்கு போதித்தார். வரலாற்றின் வழிநெடுகிலும், இன்றும் திருஅவை **"ஏழைகள் சார்புத் திருஅவை"** என்றே தன்னை அடையாளப்படுத்திக் கொள்கின்றது.

கடந்த ஆண்டு அக்டோபர் 24 ஆம் நாள் திருத்தந்தை பிரான்சிஸ் வெளியிட்ட **"அவர் நம்மை அன்பு செய்தார்"** (Dilexit Nos) என்ற திருத்தூதுமடலில் **"தன் உருவை இழக்கும் அளவிற்கு துன்புறுத்தப்பட்ட, பழிக்கப்பட்ட, தூற்றப்பட்ட மனிதர்களோடு இயேசு தன்னை அடையாளப்படுத்திக் கொண்டு அவர்களை மதிப்பிற்குரியவர்களாகவும், மாண்பிற்குரியவர்களாகவும் உயர்த்தினார்"** என்று பதிவு செய்கின்றார் (D.N.170) இயேசுவின் இதயத்தின் இரக்கத்தால் தூண்டப்பட்டவர்களாக நாமும் அன்பை விதைப்பதிலும், துன்புறுவோர் விடுதலைக்காக உழைப்பதிலும் ஆர்வம்கொள்ள வேண்டும் என்று அழைப்பு விடுக்கின்றார்.

இன்றைய நம் திருத்தந்தை பதினான்காம் லியோ இவ்வருடம் அக்டோபர் நான்காம் நாள் **"நான் உங்களை அன்பு செய்கின்றேன்"** (Dilexi TE) என்ற திருத்தூது மடலை வெளியிட்டார். திருஅவை ஏழைகள்

நலம் பேணும் இயக்கமாக செயல்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி எழுதப்பட்ட இம்மடலில் புனித அகஸ்டின் மத் 19:21 இறை சொற்றொடரை மையமாகக் கொண்டு இயேசுவின் வாய்மொழியாகப் புனைந்து எழுதிய கூற்றை குறிப்பிட்டுள்ளார். எனக்கு நீ பூமியைத் தந்தால் உனக்கு நான் விண்ணகத்தைத் தருவேன்; எனக்கு நீ அழிந்து போகும் செல்வத்தைத் தந்தால் உனக்கு நான் அழியா செல்வத்தைத் தருவேன்; எனக்கு நீ உணவுதந்தால் உனக்கு நான் வாழ்வைத் தருவேன்; **"எனக்கு நீ விருந்தோம்பல் செய்தால் உனக்கு நான் இல்லம் தருவேன்; நோயுற்றபொழுது என்னை நீ பார்க்க வந்தால் உனக்கு நான் ஆரோக்கியமான வாழ்வு தருவேன்; சிறைக்கு வந்து என்னை சந்தித்தால் உனக்கு நான் விடுதலையைத் தருவேன்; எனது ஏழை ஒருவருக்கு நீ கொடுத்த உணவு உண்ணப்பட்டுவிடும். அதற்குப் பதிலாக நான் உனக்கு கொடுக்கும் உணவு என்றென்றைக்கும் புத்துணர்வு தருவதாக இருக்கும்"** எந்த அளவிற்கு நீ ஏழைகளுக்கு கொடுக்கின்றாயோ அதைவிட அதிகமான வெகுமதியை இயேசு உனக்குத் தருவார் (D.T.45) என்ற அகுஸ்தீனாரின் கூற்றை மேற்கோளாகக் கையாண்டுள்ளார். புனித அகுஸ்தீனார் புனைவாகக் கூறியது எனினும், இயேசு தன் நம்பிக்கையாளர்களிடம் ஏழைகள் சார்பு நிலைப்பாட்டை எதிர்பார்க்கின்றார் என்பதை அழுத்தமாகக்கூறும் பதிவு இது.

ஏழைகள் சார்பு என்பது கிறித்தவ நம்பிக்கையாளரின் கடமை என்பதை இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் இன்றைய உலகில் திருஅவை என்னும் ஏடு இதயத்தை ஊடுருவும் வார்த்தைகளால் பதிவு செய்துள்ளது. இன்றைய அவலநிலையில் கிறிஸ்துவே ஏழைகளின் வடிவில்வந்து தம்முடைய சீடர்களின் அன்பு இரக்கத்தை உரத்த குரலிட்டு இறைஞ்சி வேண்டுவதுபோல் உள்ளது. எனவே, இறைமக்கள் தமது தேவைக்கு அதிகமாக இருப்பதிலிருந்து மட்டுமல்லாது தமக்கு தேவையானவற்றிலிருந்தும்கூட உதவி செய்யக் கடமைப்பட்டவர்களாவர்கள் என்று கூறுகின்றது (இ.உ.தி. எண் 88).

1983-ல் திருத்தந்தை இரண்டாம் ஜாண்பால் வெளியிட்ட திருஅவை சட்டத்தொகுப்பும் ஏழைகள்மீது கிறித்தவ நம்பிக்கையாளர்கள் கொண்டிருக்கவேண்டிய சிறப்புக் கரிசனையை வலியுறுத்துகின்றது. இறைமக்களின் கடமைகளும் உரிமைகளும் குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில் (திருஅவை சட்டங்கள் 208-223) திருஅவை சட்டம் 2222 – **"சமூக நீதியை மேம்படுத்தவும் மற்றும் ஆண்டவரின் கட்டளையை மனதிற்கொண்டு தங்கள் சொந்த வருவாயிலிருந்து ஏழைகளுக்கு உதவிபுரியவும் அவர்கள் கடமைப்பட்டுள்ளனர்"** என்று கூறுவதன்மூலம் ஏழைகள் சார்பு என்பது கிறித்தவ நம்பிக்கையாளரின் கடமை என்பதை சுட்டிக்காட்டுகின்றது.

திருஅவையின் பார்வையில் ஏழைகளுக்கு கொடுப்பது தானம் அல்லது ஈகை அல்ல. மாறாக ஏழைகளுக்குக் கொடுப்பது சமூக நீதியை நிலைநாட்ட நாம் எடுத்துக்கொள்ளும் முயற்சி என்று அழுத்தமாக அறிவுறுத்துகின்றது. ஏழைகள் தவறான சமூக அமைப்பால், அரசியல் செயல்பாடுகளால், பொருளாதார திட்டங்களால் வஞ்சிக்கப் பட்டவர்கள். சமூகத்தின் ஒரு பகுதியினர் ஏழைகளாக வாழ நிர்ப்பந்திக்கப் பட்டிருக்கின்றார்கள் என்பதே உண்மை. எனவேதான், தி.ச. 2221-ல் பிறரன்பு பணிகள் செய்ய கிறித்தவ நம்பிக்கையாளர்கள் உதவவேண்டும் என்று கூறிவிட்டு மீண்டும் தி.ச. 222-2-ல் சமூக நீதியை நிலைநாட்டும் கடமையையும், ஏழைகளுக்கு உதவிபுரிய வேண்டிய கடமையையும் தனித்து திருஅவைச்சட்டம் வலியுறுத்துகின்றது.

இன்று திருஅவையில் ஒரு முரண்பட்ட சூழலைக் காண்கின்றோம். சுமைசுமந்து சோர்ந்திருப்போரே எல்லோரும் என்னிடம்

வாருங்கள். உங்களுக்கு இளைப்பாற்றி தருவேன் என்ற இயேசுவின் வார்த்தைகளைக் கூறி இந்த சமூகத்தின் அவலங்களால் அழுத்தப்பட்டிருக்கும் மக்களை அழைக்க இயலாத நிலையில் நம் தலத் திருஅவைகள் உள்ளன. வறுமையுற்றோர் தங்கள் ஏழ்மையின் காரணத்தினால் அருளடையாளங் களின் உதவியை இழக்காதிருக்க எப்பொழுதும் கவனமுடன் இருக்க வேண்டும் என்று திருஅவைச்சட்டம் வலியுறுத்துகின்றது (தி.ச. 848). பல இடங்களில் அருளடை யாளங்கள் கட்டாய வசூலுக்கான ஆயுதமாக பயன்படுத்தப்படுவதும், இச்சுமையை தாங்க முடியாத பலர் மாற்று சபைகளை நாடிச் செல்லும் நிலைக்குத் தள்ளப்படுவதும் கிறிஸ்துவின் மதிப்பீடுகளுக்கு எதிரானது.

அருளடையாளங்கள் மற்றும் அருள்வேண்டல் குறிகள் வழங்கப்படும்போது எவ்வளவு காணிக்கைகள் வாங்கலாம் என்பதை வரையறுப்பது மறைமாநில ஆயர் குழாமின் கடமை (தி.ச. 1264-2). அருள்பணியாளர்களோ, பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையினரோ மறைமாநில ஆயர்குழாம் அல்லது மறைமாவட்ட ஆயர் வரையறுத்துக்கூறியுள்ள காணிக்கைகளுக்கு அதிகமாக எதுவும், கேட்கக்கூடாது (தி.ச. 848) என்று கண்டிப்புடன் திருஅவைச்சட்டம் கூறுகின்றது.

ஏழைகள் சட்டத்தால் பாதுகாக்கப்பட வேண்டும். திருஅவையில் ஏழைகள் தங்கள் உரிமைகளைப் பெற்றுக்கொள்ள எந்தவிதமான தடைகளும் இருக்கக்கூடாது. குறிப்பாக **“பணம்”** தடையாக இருக்கக்கூடாது என்று திருஅவைச்சட்டம் வலியுறுத்துகின்றது. ஆதித்திருஅவை ஏழைகள் சார்பு கொண்ட திருஅவையாக அமைந்திருந்ததுபோல இன்றும் வீண் ஆடம்பரங்களைத் தவிர்த்து ஏழைகள் சார்பான திருஅவையாக இறையாட்சி மதிப்பீடுகளில் நிலைத்துநின்றால் இத்திருஅவை கிறிஸ்துவை பிரதிபலிக்கும் திருஅவையாகவும் ஏழைகள் ஏற்றம் பெற துணைபுரியும் திருஅவையாகவும் திகழும்.

# யார் அயலான் ?

**சேவியர்**

பார்ப்பது
முதல் நிலை
நிற்பது வளர் நிலை
உதவுதலே
உயர் நிலை !

இறைவனின் இரக்கம்
பாதை மாற்றி
பயணம் செல்லாது !



காயத்தைத்
தொடாமால் கடப்பது
சட்டங்களின்
தூய்மை !

காயத்தைத்
தொட்டுச் சுமப்பதே
இயேசுவின்
தூய்மை !

சாலை ஓரமே
பிரசங்க மேடை !
அன்பே
ஆகச் சிறந்த
காணிக்கை !



குற்றுயிராய்க்
கிடந்த மனிதர்
நம்
இரக்கத்தை
உரசிப் பார்க்கும்
பணித்தளம் !

லேவியும்
குருவும்
ஆடையின் புனிதத்தைக்
காத்துக் கொண்டார்கள் !

சாமான்யச்
சமாரியனே
ஆண்டவரின் புனிதத்தை
அணிந்து கொண்டான் !

ஆலயங்களில்
கொட்டப்படும் காணிக்கைகளில்
அல்ல,
காயங்களில்
ஊற்றப்படும் மருந்தினில்
இயேசு
ஆராதிக்கப்படுகிறார்



# யார் புனிதர்?

அருள்பணி. D. ஜெரால்டு ஜஸ்டின்

புனிதர்கள் வானத்தில் இருந்து இந்தப் பூமிக்கு நேரடியாக வந்தவர்களோ, இறைவனால் படைக்கப்பட்ட தூதர்களோ அல்ல. மாறாக, மனிதரைப்போன்று



நிறைகுறைகளோடு இம்மண்ணில் வாழ்ந்தவர்கள். கோதுமை மண்ணில் மடிந்து பலன் தருவதுபோல பலரின் நிலை வாழ்வுக்காக, தங்களை இழந்தவர்கள். அதன் பயனாய் நிலைவாழ்வு பெற்றவர்களே புனிதர்கள். எப்பொழுது தங்கள் பிறப்பின் நோக்கினை அல்லது இலக்கினை நன்கு உணர்ந்தார்களோ அக்கணமே, இறைப் பாதையில் பயணப்பட்டவர்கள். இறைவனோடு இணைந்து, இறைவனோடு இயைந்து வாழ்ந்தவர்கள் புனிதர்கள். தூயபவுல் கூறுவது போல் **"வாழ்வது நானல்ல, என்னில் கிறிஸ்து வாழ்கிறார்"** (கலா 25:20) என்று உரக்கச் சொல்லி, ஆண்டவரைச் சுவைத்து மகிழ்ந்தார்கள். இந்தப் புனிதர்கள் வாழ்வில் மிளிர்கின்ற பண்புகளை நாமும் சுவைத்து இன்புறுதல் நலம் பயப்பதாய் அமையும்.

**1) கிறிஸ்து எனும் புதையலைக் கண்டெடுத்தவர்கள்**

நற்செய்தியாளர் மத்தேயு தன்னுடைய நற்செய்தியில் 13 ஆம் அதிகாரத்தில் (மத் 13:44-46) முத்து, புதையல் என்னும் இரு உவமைகளைக் கையாள்கிறார். புதையலைக் கண்டவன் தமக்குள்ள எல்லாவற்றையும் விற்று அதைத் தனதாக்கிக் கொள்வது போலவும், முத்தைக் கண்டவன் தனக்குள்ள அனைத்தையும் விற்று அம்முத்தை சொந்தமாக்கிக் கொள்வது போலவும் புனிதர்கள் கிறிஸ்து என்னும் புதையலை, கிறிஸ்து என்னும் முத்தை தங்கள் வாழ்வின் ஆதாரமாக்கிக் கொண்டவர்கள்.

ஒரு காலத்தில் ஆண்டவர் இயேசுவை ஏற்றுக்கொள்ளும் முன், யூத சமய சட்டங்களில், தன் இனத்தில், தன் குலத்தில் பெருமை பாராட்டிய சவுல், கிறிஸ்து என்னும் புதையலைக் கண்ட பின் பிலி 3:8 **"உண்மையில் என்னைப் பொறுத்தமட்டில் என் ஆண்டவராம் கிறிஸ்து இயேசுவைப் பற்றிய அறிவே நான் பெறும் ஒப்பற்ற செல்வம்"** என்றும் **"கிறிஸ்துவை ஆதாயமாக்கிக் கொள்ள எல்லாவற்றையும் குப்பையாகக் கருதுகிறேன்"** என்றும் கூறிய மனப்பாங்கு இதை உறுதி செய்கிறது.

நமது மண்ணின் மைந்தரும், மறைசாட்சியும், புனிதருமான புனித தேவசகாயத்தின் வாழ்வு முற்றிலும் இதற்குச் சான்று பகர்கிறது. நாயர் குலம், உயர்ந்த பதவி, அரண்மனை வாழ்வு, அதிகாரமிடுக்கு, போர்க்கலையில் வல்லவர், ஆச்சாரமான பெருமைமிகு குடும்பம், அரசரோடு நெருங்கிய நட்பு, நினைத்ததைச் சாதிக்கும் திறன், சென்ற இடமெல்லாம்

புகழ்பெற்று மிகச்சிறப்போடு வாழ்ந்தார் நீலகண்ட பிள்ளை. ஆண்டவர் இயேசு என்னும் புதையலைக் கண்டபோது எல்லாவற்றையும் குப்பை எனகருதி, ஒப்பற்ற செல்வமாகிய கிறிஸ்துவை ஆதாயப்படுத்தியவர். **“ஆண்டவர் எத்துணை இனியவர் என்று சுவைத்துப் பாருங்கள்; அவரிடம் அடைக்கலம் புகுவோர் பேறுபெற்றோர்”** (திபா 34:8) என்ற தாவீதைப்போல் ஆண்டவரைக் கண்டு, அறிந்து, சுவைத்து சான்று பகர்ந்தவர்கள் புனிதர்கள்.

**2) வேள்வித் தீயில் தங்களைப் புடமிட்டவர்கள்**

எசா 48:10 **“நான் உன்னைப் புடமிட்டேன். ஆனால் வெள்ளியைப் போல் அல்ல. துன்பம் எனும் உலை வழியாய் உன்னைத் தேர்ந்தெடுத்தேன்”**

மறைசாட்சிகள், புனிதர்கள் கிறிஸ்துவை வாழ்வாக்கினார்கள். தங்கள் வார்த்தையால், வாழ்வால், செயல்களால் கிறிஸ்துவை இவ்வுலகிற்கு வழங்கினார்கள் என்பதற்காகவே துன்பத்தை, சிலுவையை, வேதனையை அனுபவித்தார்கள். எத்தகையத் துன்பங்களிலும் துவண்டுவிடாமல் துணிந்து பயணித்தவர்கள். பஞ்சம், பட்டினி, இடர்கள் வந்தபோதும், கலைமான்கள் நீரோடைக்கு ஏங்கி நிற்பதைப்போல, ஆண்டவரின் அருள் பார்வைக்காய் ஏங்கியவர்கள். புனிதர்களின் உள்ளமெல்லாம் ஆன்ம தாகத்தால் கனன்றது. துன்புறுத்தல்கள், புறக்கணிப்புகள், அவமானங்கள், சித்தவதைகள் இவற்றின் போதும் அணு அளவேனும் அசையாமல் கிறிஸ்துவில் நங்கூரம் இட்டவர்கள்.

உரோ 8:35 **“கிறிஸ்துவின் அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கக் கூடியது எது? வேதனையா? நெருக்கடியா? இன்னலா? பட்டினியா? ஆடையின்மையா? இடரா? சாவா? எதுதான் நம்மைப் பிரிக்க முடியும்.”** என்ற உறுதிபாட்டோடு விசுவாசத்தைக் காத்துக் கொண்டவர்கள்தான் புனிதர்கள்.

உலகில் யாருடைய துன்புறுத்தலுக்கும் அஞ்சாமல் இயேசுவே ஆண்டவர் என்று அகிலமெங்கும் சுமந்து சென்றவர்கள். உயிருக்கான அச்சுறுத்தலர்கள் வந்தபோது மகிழ்வோடு ஏற்று ஆன்மாவைக் காத்துக் கொண்டவர்கள். **“ஆன்மாவைக் கொல்ல இயலாமல் உடலை மட்டும் கொல்பவர்கட்கு அஞ்ச வேண்டாம். ஆன்மாவையும் உடலையும் நரகத்தில் அழிக்க வல்லவருக்கே அஞ்சுங்கள்”** (மத் 10:18) என்ற உயிராற்றல்மிக்க வார்த்தையால் உறுதியோடும், உவப்போடும் வாழ்வில் துயர்களை ஏற்று இயேசுவுக்குச் சான்று பகர்ந்தனர் புனிதர்கள்.

**3) கிறிஸ்துவை மட்டும் ஆதாயமாக்கியவர்கள்**

புனிதர்கள், அவர்கள் வாழ்ந்த காலச் சூழலுக்கு ஏற்றவாறு தங்கள் விசுவாசத்தில் நிலைத்தனர். கிறிஸ்துவின் மனநிலையை உள்ளத்தில் கொண்டு, சென்ற இடமெல்லாம் கிறிஸ்துவை சுமந்துச் சென்றவர்கள்; ஆண்டவர் இயேசுவின் பாடுகளில் எஞ்சியுள்ளவற்றை தங்கள் உடம்பில் தங்கி பணியாற்றியவர்கள்; எதையும் தமக்கென்று செய்யாமல் ஆண்டவர் இயேசுவின் மாட்சிக்காக செய்தவர்கள். எதையும் தமக்கென்று வைக்காமல் கடவுளின் மாட்சியின் பொருட்டு இழந்தவர்கள். **“நாங்கள் பயனற்ற பணியாளர்கள்; எங்கள் கடமையைச் செய்தோம்”** (லூக் 17:10) என்ற உணர்வோடும் உயிராற்றலோடும் நற்செய்தி பணியாற்றினார்கள். எத்தகைய எதிர்பார்ப்பும் இன்றி கிறிஸ்துவை ஆதாயமாக்கிக் கொண்டவர்கள். **“நற்செய்தி அறிவிப்போரின் பாதங்கள் எத்துணை அழகாய் இருக்கின்றன”** என்ற மறைநூல் வாக்கிற்கு ஏற்றவாறு தங்கள் வாழ்வையே நற்செய்தியாக்கியவர்கள்.

இத்தகைய மாமனிதர்கள், தெய்வ நிலையடைந்த புனிதர்களை நினைவுகூரும் இம்மாதத்தில், நாம் இப்புனிதர்களின் வாழ்வு, பணி, நற்செய்தி அறிவிப்பில் இருந்த ஆர்வம், சோதனைகளை வெல்லும் மனஉறுதியை வாழ்வாக்குவதே இறைவனுக்கும் புனிதர் களுக்கும் நாம் செலுத்தும் நன்றிக் கடனாகும்.



# நம் செயல்களால் நினைவு கூறப்படுவோர்

அருள்பணி. N. மார்ட்டின்,
பணிக்குழுக்களின் ஒருங்கிணைப்பாளர்.

நிறைவியலில் கற்றுக்கொள்ளும்போது **"இறப்பு என்பது ஒரு முடிவில்லா வாழ்வின் நம்பிக்கை"**. இயேசுவின் வாழ்வில் இறப்பு என்பது ஒரு மாற்றமே தவிர அழிவு அல்ல. **"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே! என்னிடம் நம்பிக்கை கொள்ளும் எவரும் என்றுமே சாகமாட்டார்"** (யோ. 11:25). எனவே நாம் வாழ்கின்ற காலத்தில் நன்மை செய்வோருடைய செயல்கள் என்றுமே நினைவு கூறப்படுகிறது.

சமீபத்தில் ஒரு பெரும் கூட்டத்தில் கூட்ட நெரிசலில் சிக்கி இறந்த நபர்களைப் பற்றி செய்தித்தாள்களிலும் தொலைக்காட்சியிலும் YouTube வழியாகவும் தெரிந்து கொண்டோம். காமராஜ்க்கு 67 வயதான காலத்தில் 67 அடி உயரத்தில் கட் அவுட்டில் ஏறிய இளைஞனை கண்டித்து, ஒருவேளை ஏதாவது ஆபத்து ஏற்பட்டால் பெற்ற தாய்க்கு பதில் செல்வது யார்? என கேட்ட நிகழ்வை இன்றும் நினைவு கூர்கின்றோம்.

கொல்கொத்தா புனித அன்னை தெரசா செய்த சமூக செயல்களுக்காக இந்திய அரசும், வெளிநாட்டிலும் மிகப்பெரிய பரிசு கொடுக்கப்பட்டது. இறந்த பூத உடலை 5 நாட்கள் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு அரச மரியாதையோடு அடக்கம் செய்யப்பட்டார். காரணம் அவர்களின் சிறப்புமிகு பணிகளால் இன்றும் நினைவு கூர்கின்றோம்.

நெல்சன் மண்டேலா 28 ஆண்டு காலம் கறுப்பு இன மக்களுக்காக தென் அமெரிக்க மக்களின் விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். அவருடைய அரும்பெரும் செயல்களால் இன்றும் நினைவு கூர்கின்றோம்.

புனித தேவசகாயத்தை இந்திய பொதுநிலையினரின் புனிதராக திருத்தந்தை லியோ அவர்கள் அக்டோபர் மாதம் 15 ம் தேதி அறிவித்திருக்கிறார். காரணம், புனித தேவசகாயத்திற்கு கிறிஸ்துவிடம் அவர்கொண்ட நம்பிக்கை மற்றும் அவரின் தியாகங்கள், துன்பங்களை தாங்கிக் கொண்ட மனவலிமை அனைத்தும் இன்றும் நினைவு கூர்கின்றோம். குறிப்பாக நம் பெற்றோர்கள், கற்றுக்கொடுத்த ஆசிரியப் பெருமக்கள், சமூக ஆவலர்கள், அருள்பணியாளர்கள், அருள்சகோதரிகள் அவர்களுடைய நற்செயல்களை இன்றும் நாம் நினைவு கூர்கின்றோம்.

ஒருமுறை வானதூதர்கள் ஒரு கொல்லனிடம் வந்து உங்களைக் கடவுள் அழைக்கிறார். **உடனே வா!** என்று அழைத்தனர். அதற்கு அவர் இப்போது வருவதாக இல்லை காரணம், நீண்ட மாதங்களுக்குப் பிறகு எங்கள் ஊரில் இப்போதுதான் நல்ல மழை பெய்துள்ளது. எனவே விவசாயிகளுக்கு ஏர்க் கலப்பை செய்து கொடுக்க வேண்டும் என்றார். ஒரு வாரத்திற்கு பிறகு மீண்டும் வானதூதர்கள் அழைத்தார்கள். மாட்டு வண்டிகளை பழுது பார்த்து கொடுக்க வேண்டும் வரமாட்டேன் என்றார். சில மாதங்களுக்குப் பிறகு மீண்டும் அழைத்தபோது மண்வெட்டிகள் செய்து கொடுக்க வேண்டும் எனச் சொல்லி கடவுளின் அழைப்பை

மறுத்தார். ஒருமாதம் கடந்து அழைத்தபோது இப்போது நான் வருகின்றேன். எங்கள் உழவர்களின் தேவைகளை நிறைவு செய்துவிட்டேன். அவர்கள் விவசாயத்தின் வழியாக நல்ல அறுவடை செய்து மகிழ்வார்கள். எனது கடமையை சரியாகச் செய்துவிட்டேன். அவர்களின் தேவைகளை நிறைவுச்செய்து விட்டேன். இப்போது கடவுளின் அழைப்பை ஏற்று உங்களோடு வருகிறேன் என்றார். வானதூதர்களோ, நீ விண்ணகம் வர வேண்டாம், மண்ணகத்திலே விண்ணகத்தை கண்டு வாழ்கின்றாய். இறந்து புகழ்பெறும் உலகில் வாழ்ந்து புகழ்பெற்றுள்ளாய். ஆகவே, நீ வாழும் புனிதர் எனச் சொல்லி வான தூதர்கள் மறைந்தார்கள்.

**“ஆண்டவருக்குள் இறந்தவர்கள் செய்த நன்மை அவர்களோடு கூடவரும்”** (தி.வெளி. 14:13). இயேசுவில் நம்பிக்கை கொள்வோர் அனைவரும் முடிவில்லா வாழ்வை நிரந்தரமாக்கிக் கொள்வார் (யோ 3:16). ஆண்டவரில் முழு நம்பிக்கை கொண்டு சமுதாயத்தில் முழு விடாமுயற்சியோடு தீமைகளை எதிர்த்து நன்மைகளை புரிந்து வாழ்பவர்கள் ஒருபோதும் இறப்பதில்லை. மாறாக, முடிவில்லாத நிறைவாழ்வைப் பெறுகிறார்கள்.

குறுகிய கால வாழ்வை நிறைவாழ்வாக அமைத்துத் தீமையை எதிர்த்து போராடுகின்ற மனிதனை ஆண்டவர் உடனே எடுத்துக் கொள்கிறார் சீராக் 4:14 சான்று பகர்கிறது.

உலகை வெல்ல வேண்டும் என்ற எண்ணம் கொண்ட அலெக்சாண்டரும் சரித்திரத்தில் நிலைத்து நிற்க வேண்டும் என ஏங்கிய நெப்போலியனும், யூதர்களைப் பழிவாங்கியே தீருவேன் என்று சபதம் எடுத்த ஹிட்லரும் இன்று இந்தமண்ணில் இல்லை.

சரித்திரத்தில் சாதனை புரிந்தவன், சாதாராண மனிதன், எல்லாம் பெற்றவன், ஆசைகளை நிறைவு செய்தவன், அன்புள்ளம் கொண்டவன், புரட்சியாளன் எவராக இருந்தாலும் மரணம் ஒருநாள் மனிதனைத் தழுவிக் கொள்கிறது. அதனால் தான் கவிஞன் **“ஓ மரணமே உனக்கு மரணம் இல்லையா”** என்று பாடினான். எவராலும் தவிர்க்க முடியாத நிகழ்வு மரணம் மட்டும்தான். ஒரு சூரியன் ஒரு சந்திரன்போல மரணம் என்பது ஒருமுறைதான். விண்ணில் தோன்றி மறையும் மின்னலைப் போல மனித வாழ்வு குறுகிய காலத்தைக் கொண்டது. ஆகவே, மண்ணுக்கும் விண்ணுக்குமிடையே நடைபெறும் போராட்டங்களில் மனிதன் தன்னையே இணைத்துக்கொண்டு இறுதிவரை போராடி புதைக்கப்பட்டாலும் உணர்வால், சிந்தனையால் மக்களின் மனங்களில் மணம் வீசிக்கொண்டே யிருப்பார்கள்.

எனவே, ஆண்டுதோறும் நம்மைவிட்டு பிரிந்து போனவர்களை நினைவு கூற நல்ல



செயல்களால் நம்மை திடப்படுத்துவோம். நம் காலத்திற்கு பிறகு நம்மையும் நினைவு கூறட்டும் நம் சந்ததிகள். எனவே, வாழ்கின்ற காலத்திலே நல்ல செயல்களை செய்வோம், நன்மைகளை செய்த முன்னோர்களையும் நினைவு கூறுவோம்.

**இறப்பு என்பது ஒரு முடிவில்லை; வாழ்வின் நம்பிக்கை என உணர்ந்து கொள்வோம்.**



# திசை மாறும் கல்விக் கொள்கைகளும் கரைந்துபோகும் காமராசரின் கல்விக் கனவுகளும்

அருள்பணி. **டோமினிக் M. கடாட்ச தாஸ்,**
கூட்டாண்மை மேலாளர், குழித்துறை மறைமாவட்டம்.

**“கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக”**

என்ற வள்ளுவனின்வாக்கு கற்றலையும் வாழ்வில் நிமிர்ந்து நிற்பதையும் வெளிப்படுத்தும் சிறந்த அளவு கோலாக கல்வியைச் சுட்டிக்காட்டினார். கற்ற சமூகம் வாழ்ந்தது என்பதை உணர்ந்த படிக்காத மேதை காமராஜர் கிராமம் தோறும் கல்வி சாலைகள் அமைத்து தமிழகம் வளர்த்தார். அவர் காலத்தில் சுமார் 20,000 புதிய பள்ளிகள் தொடங்கப்பட்டு விரைவாய் சமூக புரட்சி செய்தன.

நவம்பர் 11 –ம் நாள் **“இந்திய தேசிய கல்வி தினம்”** கொண்டாடப்படுகிறது, விழா கொண்டாடும் இந்தியத் திருநாட்டில் கல்விக்கு ஒதுக்கும் நிதி குறைவாகவும், மறக்கப்பட்ட நிகழ்வாகவும் மாறிவிட்டது. புதிய கல்விக் கொள்கை மூலம் நன்மைகளைவிட மீண்டும் குலக்கல்வியையும், மக்களை, மாணவர் சமூகத்தை திசைதிருப்பும் திரிபு வரலாறுகளையும் பாடத்திட்டங்களாகக் காட்டி ஏமாற்றப்படுகிறோம். கல்வி, உயர்கல்வி ஒரு வியாபார பொருளாக்கி, கார்பரேட் கம்பெனிகளுக்கு தாரை வார்க்கிறார்கள். NEET போன்ற போட்டி தேர்வுக்காக உருவாக்கப்பட்டு செயல்படும் பயிற்சி மையங்கள், அவை உருவாக்கும் பணத்திற்கு அளவே கிடையாது. ஏமாறும் நடுத்தர குடும்பங்களுக்கு பொருள் இழப்பும், உயிர் இழப்புமே மிச்சமாகிறது.

தமிழகம் கல்வியில் சிறந்து இன்று அகில உலகமெங்கும் சுதந்திரமாய் பயணிக்கும் இளைய தலைமுறை எண்ணற்ற சாதனை படைக்க காரணமாயிருந்த கர்ம வீரர், கல்வித்தந்தை காமராஜரின் அகன்ற தொலைநோக்கு பார்வை மட்டுமே. பாமர ஏழைகள் இலவசமாக கல்வி கற்க வேண்டும், வாழ்வில் உயர வேண்டும் என கனவு கண்டார். புதிய வரலாறு உருவானது. உணவு தந்தால் பள்ளிக்கு வருவோம் என்ற ஒற்றை குரல் இன்று உலகமெங்கும் மாதிரியாக மாறி நிற்கிறது.

உலகம் போற்றும் உத்தமர் காமராசர் ஆண்ட தமிழகத்தை தற்போது ஆளும் ஆட்சியாளர்கள் மதவாத, இனவாத, இந்தி திணிப்பு கொள்கை கொண்ட நபர்களின் பிடிக்குள் இருந்து திணறுகிறார்கள். குறிப்பாக அரசு உதவி பெறும் பள்ளிகளே இருத்தல் கூடாது என திட்டமிட்டு செயல்படுகிறார்கள். இதன் விளைவாக பல ஆண்டுகள் புதிய நியமனங்கள் இல்லை. மாணவர்கள் EMIS, ஆசிரியர், அலுவலக பணியாளர் சம்பளம் IFHRMS என்று புதிய வலைதள முயற்சிகள் மூலம் முடக்க முயன்ற பல காரியங்களை சட்ட ரீதியாகவும், தொடர் முயற்சிகளாலும் வென்றுள்ளோம். இன்னும் பெற வேண்டிய முக்கிய கோரிக்கைகள்.

**1. ஆங்கில வழி இணைப்பிரிவு மாணவர்களை பணியாளர் பணியிட நிர்ணய ஆணையில் சேர்த்தல்**

அரசு உதவிபெறும் பள்ளிகளில் அரசாணை எண். 148 நாள் 20.07.2018 வாயிலாக ஆங்கில வழி இணைப்பிரிவு துவங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் எமது அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் ஆங்கில வழி மாணவர்கள் பணியாளர்

பணியிட நிர்ணய ஆணையின்போது முழுவதுமாக புறக்கணிக்கப்படுகின்றனர். அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் ஆங்கில வழி இணைப்பிரிவு மாணவர்களையும் கணக்கில் எடுத்து பணியாளர் பணியிட நிர்ணய ஆணை வழங்கவேண்டும்.

## 2. குறைந்த பட்ச மாணவர் எண்ணிக்கையில் ஆசிரியரல்லா பணியாளர் பணியிடம் நிர்ணயம் செய்தல்

அரசாணை எண் 238 நாள் 13.11.2018 வாயிலாக ஒரு பள்ளியில் குறைந்த பட்சம் 250 மாணவர்கள் இருந்தால் மட்டுமே இளநிலை உதவியாளர், அலுவலக உதவியாளர், துப்புரவாளர் மற்றும் தூய்மைப் பணியாளர் பணியிடங்கள் வழங்கப்படுகிறது. 250 மாணவர்களுக்கு குறைவாக உள்ள பள்ளிகளிலும் அன்றாடம் தேவையான அலுவலக பணிகள், தகவல்கள் மற்றும் கோப்புகளை கல்வித்துறை அலுவலகங்களுக்கு எடுத்துச்செல்லுதல் மற்றும் பொது சுகாதாரத்தினை பேணவும் மேற்காண் பணியாளர்கள் மிகமிக அவசியம். மேலும் மேல்நிலைப்பள்ளிகளில் ஆய்வக உதவியாளர் பணியிடமும் கட்டாயத் தேவை.

எனவே அரசாணை 238 நாள் 13.11.2018-ஐ ரத்து செய்து ஏற்கனவே வரையறுக்கப்பட்ட அளவுகோல் (அரசாணை 583 நாள் 23.04.1966) தொடர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

## 3. சிறப்பாசிரியர் பணியிடங்கள்

மாணவர்களை கல்வி, கலை, விளையாட்டு மற்றும் ஒழுக்கம் ஆகிய பன்முக ஆளுமையில் வளர வைக்க வேண்டியது அரசின் கடமை காலத்தின் கட்டாயம். தமிழக அரசு விளையாட்டுத்துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து குறைந்த பட்சம் ஒரு பள்ளிக்கு ஒரு உடற்கல்வி ஆசிரியர் பணியிடம் நியமனம் செய்ய வேண்டும். இவ்வாறு வழங்கும் பட்சத்தில் லட்சக்கணக்கான மாணவர்கள் விளையாட்டுத்துறையில் சாதனைபுரிவார்கள். மேலும் தையல், இசை, ஓவியம், விவசாயம் மற்றும் நடன ஆசிரியர் பணியிடங்கள் தேவையின் அடிப்படையில் ஒவ்வொரு பள்ளிக்கும் நியமனம் செய்யப்பட வேண்டும்.

## 4. 1991-92 -ஆம் ஆண்டு முடிய ஆரம்பிக்கப்பட்ட பள்ளிகளுக்கும் தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளுக்கும் மான்யம் வழங்குதல் (கலைஞர் ஆணை நிறைவு செய்தல்)

1991-92 -ஆம் ஆண்டு முடிய ஆரம்பிக்கப்பட்ட அனைத்து வகை பள்ளிகளுக்கும் அப்போது முதல்வராக இருந்த முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் முழுமான்யம் வழங்க உத்தரவுகளை வழங்கினார். இப்பள்ளிகளுக்கு மான்யம் இதுநாள் வரை அனுமதிக்கப்படவில்லை. இப்பள்ளிகளுக்கு முழுமான்யம் வழங்கப்பட வேண்டும்.

## 5. ஏழை மாணவர் நலத்திட்டங்கள்

அரசுப் பள்ளிகளில் பயிலும் தகுதி வாய்ந்த மாணவர்கள் மருத்துவ படிப்பு பயில வாய்ப்பு நல்கும் வகையில்; வழங்கப்பட்ட 7.5% இட ஒதுக்கீட்டினை அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் ஏழை மாணவர்களும் சாதி, சமய, மொழி வேறுபாடின்றி பயன்பெறும் வண்ணம் விரிவாக்கம் செய்ய வேண்டும்.

மேற்படி கோரிக்கைகள் நிறை வேற்றினால் எண்ணற்ற மாணவர்கள் நலன் பெறுவர். ஆசிரியர் வேலைவாய்ப்பு பெறுவர். நாம் ஆற்றிய கல்விப்பணியை தொய்வின்றி இன்னும் சிலகாலம் முன்னெடுத்து சிறப்பாக பணியாற்றுவோம். கடந்த அக்டோபர் 2-ம் தியதி நாகர்கோவில், ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரியில் குமரி மாவட்ட உதவிபெறும் பள்ளிகள் ஒருங்கிணைந்து கோரிக்கை மாநாடு குமரி மாவட்ட ஆயர்கள் தலைமையிலும் பிற மத போதகர்கள் முன்னிலையிலும் சிறப்பாக தொடங்கியுள்ளோம். இதன் தொடர்ச்சியாக அடுத்த மாதம் திருநெல்வேலியில் மாவட்ட அளவில் மாநாடும், டிசம்பர் 6 -ம் தியதி மதுரையில் மதுரை பேராயர் மேதகு. ஆன்றணி சாமி அவர்கள் தலைமையில் மாநில அளவிலான மாபெரும் கோரிக்கை மாநாடு நடைபெறும் என்பதையும் அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம்.



# இந்தியாவும் எளியோருக்கான சட்டங்களும்

அருள்பணி. M. C. ராஜன்

இந்தியா என்கிற துணை கண்டம் ஒரு பழம்ள்பெரும் நிலப்பரப்பை கொண்டதாகும். பல நூற்றாண்டு காலமாக சாதி, இனம், பாலினம், மதம் போன்றவற்றின் அடிப்படையில் பெரும்பாலான மக்கள் அடிமைகளாக வாழ்ந்த ஒருசமூகம் இது. குறிப்பாக இன்றைய வார்த்தைகளில் சொல்ல வேண்டும் என்றால், பட்டியலின பழங்குடியின மக்கள், பிற்படுத்தப்பட்டோர், பெண்கள், சமய சிறுபான்மையினர், மாற்றுத்திறனாளிகள் போன்றோர் இந்த நாட்டில் இன்றும் எளியோராக, ஓரங்கட்டப்பட்டவர்களாக, விளிம்பு நிலை மக்களாக, மொத்தத்தில் சொல்லப் போனால் **அடையாளம் இல்லாதவர்களாக** வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட சூழலில் நமது நாட்டின்



சட்டங்களும், நீதித்துறையும் இவர்களை பாகுபடுத்துவதிலிருந்தும், அதன் அடிப்படையில் அவர்கள் உரிமைகளை இழப்பதிலிருந்தும் பாதுகாத்து, அவர்களை சமூகத்தில் வலிமையுள்ளவர்களாக ஓரளவு மாற்றி இருக்கிறது என்பது உண்மைதான். குறிப்பாக நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டத்தினுடைய தந்தை எனப் போற்றப்படுகின்ற **டாக்டர் பி ஆர் அம்பேத்கார்** அவர்கள் குறிப்பிடுகிற பொழுது “சமூக நீதியும், நேர்மறை செயல்பாடுகளும் (Affirmative Action) கண்டிப்பாக எளியோரை உயர்த்தி விடும்” அப்படிப்பட்ட ஒரு சமூக நோக்கு தேவை என்று தான் கருதினார். எனவே அவர் சொல்லுகிற பொழுது “சமூக ஜனநாயகம் அடித்தளமாக இல்லை என்றால் வெறும் அரசியல் ஜனநாயகம் நீடிக்க இயலாது”.

எனவே எளியவர்களுக்கான சட்டங்கள் என்பது வெறும் சட்ட ஆயுதங்கள் அல்ல, மாறாக “சமத்துவத்தை விரும்புகிற ஒரு சமூகத்தினுடைய அடிப்படை மனசாட்சி” ஆக அமைந்திருக்கிறது. இந்தியா சுதந்திரம் பெற்ற போது **நீதி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் எல்லோருக்கும் உறுதி செய்யப்பட வேண்டும்** என்று அறைகூவல் விடுத்தது. ஆங்கிலேயர்கள் ஆட்சிக் காலத்தில் சாதிய ஒடுக்கு முறையால் கோடிக்கணக்கான மக்கள் தீண்டத் தகாதவர்களாகவும் ஏராளமான மக்கள் தங்கள் நாடுகளில் இருந்து துரத்தப்பட்டவர்களாகவும் பெரும்பான்மையான பெண்களுக்கு கல்வியும் சொத்துரிமையும் இல்லாமல் இருந்த ஒரு காலம். அப்போது பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் **1829 ஆம் ஆண்டு உடன்கட்டை ஏறுதல் ஒழிப்புச் சட்டமும், 1856 இல் விதவைகள், மறுமணச் சட்டமும்** உருவாக்கினர்.

இருப்பினும் 1947 இல் இந்தியா

சுதந்திரம் பெற்றபிறகுதான் எளியவர்களுக்கான சட்டங்கள் பெருமளவில் உருவாகின. குறிப்பாக இந்திய அரசியலமைப்புச் சட்டம் **எளியவரை பாதுகாப்பதற்கான அடித்தளமாக கருதப்படுகிறது.**

1. பிரிவு 14 முதல் 18 வரை அடிப்படை உரிமைகள் - இப்பகுதியில் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்றும், எந்த காரணத்திற்காகவும் குடிமக்கள் மீது பாகுபாடு காட்டப்படக்கூடாது என்பதையும் உறுதிப்பட தெரிவிக்கிறது.
2. பிரிவு 38 முதல் 46 - அரசுக்கு வழிகாட்டும் நெறிமுறைகள் என்ற பகுதியில், அரசு நலத்திட்டங்களை முன்னெடுத்து சமத்துவமின்மையை குறைக்க வேண்டும் என்பதை தெளிவாக சுட்டிக்காட்டுகிறது. பிற்படுத்தப்பட்டோர், பெண்கள், பட்டியலின மக்கள், பழங்குடி இனமக்கள், சிறுபான்மையினர் இவர்களை பாதுகாப்பதற்காக பிரிவுகள் 15(4), 16 (4), 46, 330 முதல் 342 வரை உள்ள பகுதிகள் தெளிவாகப் பேசுகின்றன.

குறிப்பிட்டு சொல்ல வேண்டும் என்றால், எளியவர்களுக்கான சட்டங்களில் முதலிடம் பிடிப்பது பட்டியலின மக்கள் மற்றும் பட்டியலின பழங்குடி மக்கள் பாதுகாப்புச் சட்டங்களை குறிப்பிடலாம்.

1. 1989 ஆம் ஆண்டு பட்டியலின மக்கள் மற்றும் பட்டியலின பழங்குடி இன மக்கள் மீது தொடுக்கப்படும் தாக்குதல்களைத் தடுக்கும் சட்டம் உருவாக்கப்பட்டது. இந்த இன மக்கள் மீதான கொடுமைகளை தடுப்பதை நோக்கமாகக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட கொடுமைகள் நடைபெறுகிற பொழுது, அவற்றை வேகமான விசாரணை மூலம் நீதியை நிலை நாட்டுவதற்கு சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்க பரிந்துரை செய்கிறது. கட்டாய வேலை வாங்கும் தன்மை, நிலத்திலிருந்து அன்னியப்படுத்துதல், சமூகப் புறக்கணிப்பு போன்றவை குற்றங்களாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன.
2. 2013 ஆம் ஆண்டு தூய்மை பணியாளர்கள் கையினால் வேலை தடுப்பு மற்றும் அவர்களை பணியமர்த்துதல் சட்டம் உருவானது. இதன் அடிப்படையில், கையினால் தூய்மை பணி செய்வது தடை செய்யப்படுவதும், அப்படிப்பட்டவர்களுக்கு வேறு வேலை வாய்ப்புகளை வழங்கவும் பரிந்துரை செய்கிறது.
3. அரசியலமைப்புச் சட்டத்தின் உடைய **இட ஒதுக்கீடு அடிப்படையில்** பதினைந்து சதவீதம் பட்டியலின மக்களுக்கும், 7.5 பட்டியலின பழங்குடி மக்களுக்கும் அரசு வேலை வாய்ப்புகளிலும், கல்வி நிலையங்களிலும், இடஒதுக்கீடு கொடுக்க சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்புச் சட்டத்தினுடைய பிரிவு 16, 46 அரசு இவர்களுடைய கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகை செய்ய வேண்டும் என அறிவுறுத்துகிறது.

**பெண்கள்**

1. 1961 ஆம் ஆண்டு வரதட்சணை தடுப்புச் சட்டம் உருவானது. இதனால் வரதட்சனை வாங்குவதும் கொடுப்பதும் சட்டம் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.
2. 2005 ஆம் ஆண்டு குடும்ப வன்முறையில் இருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் உருவாக்கப்பட்டது. இதன் மூலம் உடல்ரீதியான, சொல் ரீதியான, உணர்வு ரீதியான, பொருளாதார ரீதியான பாதிப்புகளில் இருந்து பெண்களை இச்சட்டம் பாதுகாக்கிறது.
3. 2013 ஆம் ஆண்டு பணியிடங்களில் பாலியல் தொந்தரவு தடுப்பு மற்றும் பரிகாரம் சட்டம் உருவாக்கப்பட்டது. இதனால் பெண்கள் பணிபுரிகிற இடங்களில் அவர்களுக்கு பாதுகாப்பான வேலை சூழல் உருவாக்கவும், அப்படிப்பட்ட தவறுகள் நடைபெறுகிறபொழுது

தண்டிக்கப்படுவதற்கும் சட்டம் வழிவகை செய்கிறது

4. 1976 ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டம் உருவாக்கப்பட்டது. இதனால் சமமான வேலைகளில் பாலின வேறுபாடுகளை களைந்து சமமான ஊதியம் வழங்க இது பரிந்துரை செய்கிறது.

காந்தியடிகள் சொன்னதுபோல "ஒரு நாடு எந்த அளவுக்கு நாகரீகம் அடைந்துள்ளது என்பதை அந்த நாடு தன்னுடைய பெண்களை எப்படி மாண்போடு நடத்துகிறது என்பதிலிருந்து அறிந்து கொள்ளலாம்" என்று சொன்னதை உறுதிப்படுத்தும் விதமாக பெண்கள் உரிமைகளைப் பாதுகாக்க ஏராளமான சட்டங்கள் உருவாக்கப்பட்டு உள்ளன.

**பிற்படுத்தப்பட்டோருக்கான பாதுகாப்புச் சட்டம்** : 1980 ஆம் ஆண்டு மண்டல் கமிஷன் பரிந்துரைகள் நடைமுறை செய்தல் வழியாக மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 சதவீத இடஒதுக்கீடு வேலை வாய்ப்பிலும் கல்வி நிலையங்களிலும் ஒதுக்கப்பட வேண்டும் என்று உறுதியாக உரைத்தது.

**சமயம் மற்றும் மொழி சிறுபான்மையினர் பிரிவு** : அரசியலமைப்புச் சட்டத்தினுடைய பிரிவு 30; இவர்கள் தங்களுக்கென பள்ளிக் கூடங்களை நிறுவிக்கொள்ளவும் அதை நிர்வகிக்கவும் உரிமை வழங்குகிறது. 1992 ஆம் ஆண்டு தேசிய சிறுபான்மையினர் ஆணையச் சட்டத்தின் வழியாக **தேசிய சிறுபான்மையினர் ஆணையம்** உருவாக்கப்பட்டது. இது இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள், பார்சிகர்கள், மற்ற சிறுபான்மையினரையும் பாதுகாக்கிறது.

**மாற்றுத்திறனாளிகள் பாதுகாப்புச் சட்டம்**: 2016 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அதற்கு முன்னால் இருந்த ஏழு விதமான மாற்றுத்திறன் படைத்தவர் வகையிலிருந்து, 21 வகையினராக அது ஏற்றுக்கொண்டது. அரசு வேலைகளில் நான்கு சதவீத இட ஒதுக்கீடும், கல்வி நிலையங்களில் 5 சதவீத இட ஒதுக்கீடும் இவர்களுக்கு வழங்க சட்டம் வழிவகை செய்கிறது. எல்லா இடங்களிலும் அவர்கள் சென்று வருவதற்கு வசதியானச் சூழலும், அவர்களை ஏற்றுக்கொள்ளக்கூடிய சமூக மனப்பான்மையையும் இது வலியுறுத்துகிறது.

அரசியலமைப்புச் சட்டத்தினுடைய பிரிவு 39ஏ **ஏழைகளுக்கு இலவச சட்ட உதவி** கிடைக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. இவர்களுடைய உரிமைகளை பாதுகாப்பதற்காக **பொதுநலன் பேணும் வழக்குகளை** நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அதன் வழியாக நிறைவேற்ற சட்டம் வழிவகை செய்கிறது.

இவை எல்லாம் இருந்தாலும் இன்னும் இந்தியா பெருமளவில் பின்தங்கி இருப்பதை நாம் மறுக்க முடியாது. இதற்கான சில காரணங்களாக,

1. சமூக பாகுபாடு மற்றும் சாதிய ரீதியான வன்முறை இன்றும் தொடர்கிறது.
2. பட்டியலின மக்கள் மற்றும் பழங்குடியின மக்கள் மீதான தாக்குதல் தடுப்புச் சட்டத்தின் கீழ் மிகக் குறைவாகவே நீதிமன்ற வழக்குகளில் தண்டனை வழங்கியிருக்கிறது. குற்றவாளிகள் பெரும்பாலும் உயர் சாதியினராக, பணக்காரராக இருப்பதால் தப்பித்து விடுகிறார்கள்.
3. இன்றும் ஆண் பெண் ஊதிய விகிதத்தில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. அரசியலில் பெண்களின் பங்கேற்பும் மிகக் குறைவாக இருக்கிறது.
4. ஊழல், லஞ்சம், நிர்வாகத் துறையில் காணப்படுகின்ற தாமதமான செயல்பாடுகள், எளிய மனிதர்களிடத்தில் தங்களுடைய உரிமைகளை பற்றிய உண்மையான விழிப்புணர்வு இன்மை.

இவை சரி செய்யப்படுகிறபொழுது, இவற்றிற்காக உழைக்கிற மக்கள் உருவாகிறபொழுது, கல்வி, விழிப்புணர்வு மற்றும் சமூக மாற்றத்திற்கு நாம் உழைக்கிறபொழுது, அனைவரும் மாண்போடும் சமத்துவத்தோடும் சகோதரத்துவத்தோடும் வாழும் ஒரு இந்தியாவை உருவாக்க முடியும் என்பது திண்ணம்.



# போர் நிழல் முதல் உலக ஒளி வரை
# புனித இரண்டாம் ஜான் பால்

அருட்பணி. **ம. டைட்டஸ் மோகன்,**
மிலான் நகர்.




இரண்டாம் உலகப் போரின் நிழல் குவிந்திருந்தது. நாத்திகக் கொள்கையின் வேகம் ஒருபுறம், கம்யூனிசத்தின் இரும்புப்பிடி மறுபுறம் என வரலாற்றின் வலிகளைச் சுமந்து நின்றது போலந்து தேசம். யூதர்களை மனிதர்களாகக்கூட மதிக்காத ஹிட்லரின் கோரப்பிடியில் மனிதப் பிணங்களின் கொழுப்பில் சோப்பு தயாரிக்கப்பட்ட அந்த இருண்ட காலத்தில், போலந்தின் வாடோவிஸ் (Wadowise) நகரில் ஒரு வரலாற்று நாயகனின் உதயம் நிகழ்ந்தது.

**காயங்கள் செதுக்கிய கரோல்**

காலிகியா என்னும் சிற்றூரில் திரு. கரோல் வோய்த்திவா மற்றும் திருமதி. எமிலியா தம்பதியருக்கு பிறந்த மூன்றாவது குழந்தைதான் கரோல் ஜோசப் வோய்த்திவா (Karol Joseph Wojtyla) என்னும் இயற்பெயர் கொண்டவர் நம் புனிதர் இரண்டாம் ஜான் பால். இச்சிறுவன், வாழ்க்கைப் பயணத்தின் தொடக்கத்திலேயே பெரும் துயரங்களைச் சுமக்க நேர்ந்தது. ஒன்பது வயதில் தாயின் மரணம், பதின்மூன்று வயதில் அன்புச் சகோதரன் எட்மண்டின் அகால மறைவு, பின் சொந்த வீட்டை துறந்த புலம்பெயர்வு, இறுதியாக இருபதாவது வயதில் அரவணைத்த தந்தையின் திடீர்மறைவு எனத் தொடர்ந்து வந்த இழப்புகள், கரோலை ஓர் அனாதையாக மாற்றின. இருப்பினும், ஆழமான சோதனைகளையும் வேதனைகளையும் **"கடவுளின் திருவுளம்"** எனக் கருதித் துணிவுடன் ஏற்றுக்கொண்டு, வலிகளை உரமாக்கி, தன் வாழ்க்கையை முன்னோக்கி நகர்த்திய கரோலின் வாழ்வே, பின்னாளில் ஒரு மாபெரும் வரலாற்று நாயகன் உருவாவதற்கு அடித்தளமாக அமைந்தது. இவரின் வாழ்க்கை, துன்பத்திலும் தளராத மனஉறுதிநம்பிக்கையின் அழியாச் சான்றாகும்.

**பாதங்கள் தந்த பாடம்**

நவீன வரலாற்றில் 27 ஆண்டுகள் திருத்தந்தையாக அதிககாலம் பணியாற்றிய இரண்டாவது திருத்தந்தை இவரே! 1523 ஆம் ஆண்டு டச்சுக்காரரான ஆறாம் அட்ரியன் திருத்தந்தைக்குப் பிறகு முதல் இத்தாலியர் அல்லாத திருத்தந்தையும் இவரே! தனது 27 ஆண்டுகால பணியில் கத்தோலிக்கத் திருஅவையை மக்கள்பால் இழுத்துச் சென்ற கலாச்சாரம் என்றால் மிகையல்ல. பழம்பெரும்

திருத்தந்தையர்களின் மரபுகளைத் தாண்டி, சோர்விலாக் கால்கொண்டு உலகின் எல்லைகளைத் தொட்டவர். நற்செய்தியை அறிவிப்பதையே தம் வாழ்வின் இலக்காகக் கொண்டு செயல்பட்டவர்.

பூமியின் சுற்றளவை 27 முறைக்கு மேல் கடந்த தூரம் - சுமார் 1,100,000 கிலோமீட்டர் இவர் மேற்கொண்ட புனிதப் பயணங்களின் தொலைதூரம். 129 நாடுகளுக்கு மேல் பயணம் செய்து **“உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்”** என்ற இயேசுவின் ஆழமான கட்டளையை கடைபிடித்தார். தன் உடல் தளர்ந்தபோதும் பயணங்களைத் தொடர்ந்தார். ஒருபுறம் கோடான கோடி சாமான்ய மக்களுடனும், மறுபுறம் 700-க்கும் மேற்பட்ட நாட்டுத் தலைவர்களுடனும் உரையாடியவர், உரோமின் ஆயர் என்ற நிலையையும் கடந்து, உலகத் தலைவராகவும், மனிதநேயத்தின் தூதுவராகவும் திகழ்ந்தார்.

### பாரத மண்ணில் பாச முத்தம்

தமது பயணங்களின் சிகரமாக இந்திய மண்ணை நாடினார். 1986 பிப்ரவரி 1-ஆம் நாள், சோர்வைமீறிப் பாரத மண்ணில் கால் பதித்தவர், உடனடியாக முழங்காலிட்டு அதனை முத்தமிட்டுத் தன் அன்பை வெளிப்படுத்தினார். மகாத்மா காந்தி சமாதிக்கு மரியாதை செலுத்தி, பண்பாட்டுப் பன்முகத்தன்மை நிறைந்த நம் தேசத்தைப் பாராட்டினார். குறிப்பாக, சென்னையில் உள்ள புனித தோமையார் கல்லறையில் செபித்ததும், மெரினா கடற்கரையில் பத்து லட்சத்திற்கும் மேற்பட்ட மக்களைச் சந்தித்ததும் அவரது பயணத்தின் சிறப்புத் தருணங்கள். தமிழ் மொழியின் மீதும், தமிழ்நாட்டின் கலைப்பக்தியின் மீதும் கொண்டிருந்த மரியாதையை வெளிப்படுத்திய போது, மக்கள் வெள்ளம் மகிழ்ச்சியில் ஆர்ப்பரித்தது. இச்சந்திப்புகளில் அவர் அழுத்தமாக வலியுறுத்திய செய்தி சமயச் சுதந்திரம். **“மதத்தைத் தேர்ந்தெடுப்பது ஒரு தனி மனித சுதந்திரம் அதில் அரசுக்கு அதிகாரமில்லை”** என்று முழங்கினார்.

1989-ல் இரண்டாம் முறையாக டெல்லிக்கு வந்தபோது, இளமைத் துடிப்பு மறைந்து, பார்கின்சன் நோயின் பிடியில் மெதுவாக அடியெடுத்துவைத்த அவரது தோற்றம், வரலாற்றின் காலச் சுவடுகளையும், விசுவாசத்தின் தியாகத்தையும் ஒருசேரக் கண்முன் நிறுத்தியது. அவரது பயணங்கள் குறித்து திருத்தந்தையின் அதிகாரப்பூர்வ வாழ்க்கை வரலாற்றாசிரியராக செயல்பட்ட ஜார்ஜ் வீகல் குறிப்பிடுகையில் “பேதுருவின் வாரிசு, திருஅவையின் பல்வேறு பகுதிகளுக்குப் புனிதப் பயணம் மேற்கொண்டார். இந்தப் புனிதப் பயணங்கள் எப்போதும் வழிபாட்டு நிகழ்வுகள், இறைவேண்டல், நற்கருணை ஆராதனை, கிறிஸ்தவ ஒன்றிப்பு மற்றும் வெவ்வேறு மத தலைவர்களின் சந்திப்புகள் ஆகியவற்றைச் சுற்றியே அமைந்திருந்தன. அனைத்தும் ஒரு புனிதப் பயணஅனுபவத்தின் ஒரு பகுதியாக இருந்தன. 20-ஆம் நூற்றாண்டின் பிந்தைய பாதியில் மிகப்பெரிய சமூக மாற்றம் மற்றும் எழுச்சியின் காலத்தில், இரண்டாம் ஜான்பாலின் விரிவான பயணங்களும், நற்செய்தியை உலகின் எல்லைகளுக்குப் பிரகடனம் செய்ததும், உலகிற்குத் தேவைப்பட்ட ஒன்று” என்கிறார்.

### உலகை மாற்றிய அருள்வாழ்வு சிம்மாசனம்

போலந்திலிருந்து எழுந்த இந்தத் தீர்க்கதரிசி உலக வரைபடத்தையே மாற்றியமைத்தார் என்பது மிகையல்ல. 1989-களில் சோவியத் யூனியனின்(USSR) இரும்புக் கரம் வீழ்ச்சியடையவும், கிழக்கு ஐரோப்பாவில் கம்யூனிசம் மறையவும் மனசாட்சியின் மெல்லிய புரட்சிக்கு வித்திட்டார். 30 மில்லியன் ஆன்மாக்களின் மரணத்துக்குப் பொறுப்பான ஒரு சித்தாந்தத்திற்கு எதிராக, 738 உலகத்தலைவர்களைச் சந்தித்து, ஒழுக்கச் சட்டத்தையும், மனித மாண்பையும் உரக்கப் பேசினார்.

தனது முன்னோடிகளைவிட அதிக எண்ணிக்கையிலான புனிதர்களுக்குப் பட்டம் வழங்கி, புனிதத்துவத்தை சாதாரண மனிதனின் கரங்களுக்குக் கொண்டு சேர்த்தார். 1338 பேரை அருளாளர் நிலைக்கும், 482 நபர்களை புனிதர்களாகவும் உயர்த்தினார். புனித குழந்தை இயேசுவின் தெரசாவை திருஅவையின் மறைவல்லுநராக (Doctor of the Church) உயர்த்தினார். அன்பின் உருவமாய் உலகெங்கும் அறியப்பட்ட கல்கத்தாவின் அன்னை தெரேசா திருத்தந்தையின் சமகாலப் புனிதர்களுள் ஒருவர். போலந்தின் மற்றொரு மாணிக்கமான புனித ஃபவுஸ்டினா கோவால்ஸ்காவும் இவரது இதயத்துக்கு மிகவும் நெருக்கமானவர். புதிய ஆயிரமாண்டின் முதல் புனிதராக இவருக்குப் பட்டம் சூட்டியபோது, தன் மறையுரையில் ஒரு தெளிவான செய்தியை உலகிற்கு அனுப்பினார். சகோதரி ஃபவுஸ்டினாவிடம் வெளிப்பட்ட **"தெய்வீக இரக்கத்தின்"** (Divine Mercy) செய்தியானது, நாம் ஒவ்வொருவரும் கடவுளின் உண்மையான முகத்தையும், நம் சகோதரர்களின் உண்மையான முகத்தையும் அறிந்துக்கொள்ள ஒரு பாலமாக இருக்க வேண்டும் என்பதே அச்செய்தி. கடந்த செப்டம்பர் 7 ஆம் நாள் புனித நிலைக்கு உயர்த்தப்பட்டு இத்தாலிய பியர் ஜார்ஜோ ஃபிரசாத்தி (Pier Giorgio Frassati)யை அருளாளர் நிலைக்கு உயர்த்தி **"பேறுகளின் மனிதன்"** என்று செல்லப்பெயர் சூட்டியதும் இவரே! 1985-ல் உலக இளைஞர் தினங்களை உருவாக்கி, அவற்றில் 19-க்குத் தலைமை தாங்கினார். அதேபோன்று 231 நபர்களைக் கர்தினால்களாக்கினார். 6 கர்தினால்களுடைய கூட்டங்களை நடத்தினார். 6 சாதாரண மாநாடுகள் (1980,1983,1987,1990,2001), 8 சிறப்பு மாநாடுகள் (1980, 1991, 1994, 1995, 1997, 1998, 1999 மற்றும் ஒரு தனி சிறப்பு மாநாடு 1985) என 15 முறை ஆயர்களுடைய மாநாடுகளை நடத்தினார்.

## திருஅவை போதனைகளில் அசாதாரண பங்களிப்பு

1992-ல் கத்தோலிக்கத் திருஅவையின் மறைக்கல்விச் சுருக்கத்தை (Catechism of the Catholic Church) வெளியிட்டார், 14 திருத்தூது மடல்கள் (Encycicals), 15 திருத்தூது வேத அறிக்கைகள் (Apostolic Exhortations), 11 திருத்தூது விதித்தொகுதிகள் (Apostolic Constitutions), 45 திருத்தூது கடிதங்கள் (Apostolic Letters), "Crossing the Threshold of Hope"(1994),"Crossing the Threshold of Hope"(1994), "Gift and mystery, on the fifteenth anniversary of my ordination as priest"(1996), "Roman Triptycls"(2008), "Arise, fet as be soing"(2004) மற்றும் "Memory and Identify" என்ற 5 நூல்களையும் படைத்தார். "**உடலின் இறையியல்**" (Theology of the Body) பற்றிய இவரது ஞானமிகு சிந்தனைகள் இன்றும் திருஅவையையும், உலகையும் வழிநடத்தி வருகின்றன.

## ஆப்பிரிக்காவில் நற்செய்தித் தீ

இவரின் புகழ்பெற்ற நற்செய்தி ஆர்வம், ஆப்பிரிக்கக் கண்டத்தில் ஒரு புதிய வாழ்வின் நெருப்பைப் பற்றவைத்தது. பெனின் நாட்டு கர்தினால் பெர்னார்டின் காண்டின் (Bernadin Gantin) போன்றோருடன் கொண்ட நட்பின் மூலம், ஆப்பிரிக்கக் கிறிஸ்தவத்தை ஒரு **"உயிருள்ள புதிய ஏற்பாட்டு அனுபவமாக"** கண்டார். அங்குள்ள மக்களின் விசுவாசத்தின் வலிமையால் ஈர்க்கப்பட்டவர்; பலமுறை ஆப்பிரிக்காவுக்குப் புனிதப்பயணம் மேற்கொண்டார். இவரது பயணங்கள் அங்கு ஏற்படுத்திய தாக்கங்களின் விளைவாகவே, இன்று ஆப்பிரிக்கக் கிறிஸ்தவர்கள் திருஅவையின் நீண்ட பாரம்பரியப் போதனைகளுக்கு உறுதியான பாதுகாப்பாளர்களாக இருக்கிறார்கள். அங்கு **"JP II கத்தோலிக்கர்கள்"** என ஒரு தலைமுறையையே உருவாக்கினார்.

இதனை காண்டின் பதிவு செய்கையில் "திருத்தந்தை இரண்டாம் ஜான் பால்

ஆப்பிரிக்காவால் ஈர்க்கப்பட்டார். ஆப்பிரிக்க கிறிஸ்தவத்தை அவர் உயிருள்ளதாகவும், நற்செய்தியின் புதிய அனுபவத்தின் ஒரு வகையான புதிய ஏற்பாட்டு அனுபவமாகவும் கண்டார். அதை ஆதரிக்கவும், உயர்த்தவும் மிகவும் ஆர்வமாக இருந்தார். 2014 மற்றும் 2015-ல் திருமணம் மற்றும் குடும்பம் பற்றிய இரண்டு ஆயர் மாநாடுகளின்போது, திருஅவையின் திருமணம் மற்றும் குடும்பம் பற்றிய பாரம்பரியப் புரிதலுக்கு மிகவும் வலுவான பாதுகாப்புகள் ஆப்பிரிக்க ஆயர்களிடமிருந்து வந்தன என்பது மிகவும் சுவாரஸ்யமானது. அவர்களில் சிலர் முதல், இரண்டாம் தலைமுறை கிறிஸ்தவர்கள், திருத்தந்தை இரண்டாம் ஜான் பால்-ன் உருவத்தில் ஆழமாக உருவாக்கப்பட்டவர்கள். அவரை அவர்கள் **"ஒரு மாதிரி ஆயராகக் கருதுகின்றனர்"** என்கிறார். இங்ஙனம் திருத்தந்தை புனித இரண்டாம் ஜான் பால் அவர்களின் ஆப்பிரிக்க செல்வாக்கு உலகை மாற்றியது; அது திருஅவையையும் நிரந்தரமாக மாற்றியது.

**இலக்கு இதுவே**

புனித இரண்டாம் ஜான் பால் விடுத்த **"அஞ்சாதிருங்கள்!"** என்ற அழைப்பு, நமது காலத்தின் பெரும் சவால். தனிப்பட்ட வாழ்க்கையிலும், சமூகப் பிரச்சினைகளிலும், நாம் சந்திக்கத் தயங்கும் அல்லது ஒதுக்கிவைக்கும் **"மற்றவர்களை"** (The other) நாம் அச்சமின்றித் தழுவ வேண்டும். அவர் கண்ட கனவு, வெறுமனே ஒரு **"கிறிஸ்தவ உலகம்"** அல்ல. மாறாக, ஒவ்வொரு மனிதனும் தன் முழு மாண்புடன் வாழும் ஒரு சுதந்திரமான மற்றும் இரக்கமுள்ள உலகம். அவரது ஆசீர்வாதத்தைப் பற்றிக்கொண்டு, நாம் இப்போதே புறப்படுவோம்:

***அஞ்சாதிருங்கள்!***
**எல்லாக் கதவுகளையும் திறங்கள்!**
**நமது மனசாட்சியைத் தொந்தரவு செய்யும்**
**ஒவ்வொரு வேதனையையும் வரவேற்று,**
**அங்கே கிறிஸ்துவின் முகத்தைத்**
**தரிசிப்போம்.**
**அவரது ஆசீர் - நம் அச்சத்தைப் போக்கும்**
**ஒளி. அவரது வாழ்வு - நமக்கான**
**மக்கள் பணியின் வரைபடம்.**
**அவர் கண்ட கனவு - அதுவே**
**நமது நிரந்தர இலக்கு!**

அடுத்த இதழ் "**உரிமை மனித உடமை**" என்ற சிந்தனையில் மலர இருக்கின்றது. புத்தாண்டு முதல் நமது புதிய தேடல் இதழை மெருகூட்டுவதற்கும் வாசகர்கள் எளிதில் படிப்பதற்கும் ஆசிரியரின் வேண்டுகோளுக்கு ஏற்ப தங்களது கவிதை, கட்டுரை, கதை துணுக்குகள், சிந்தனைகளை **1, $1^1/_2$, 2** பக்கத்திற்குள் **02-11-2025**-ம் தேதிக்கு முன் புதிய தேடல் முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். சிறந்த படைப்புகள் இதழில் வெளியிடப்படும். உங்கள் விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.



# தேச ஒற்றுமை... தேசத்தின் வலிமை...

- **ஆன்றணி லீமா றோஸ்,**
ஆசிரியர், எழுத்தாளர்.

**ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே -நம்மில்**
**ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே**

என்றார் பாரதியார். உலகின் மிகப்பெரிய மக்களாட்சி நாடுகளில் ஒன்று நம் தாய்த்திருநாடு இந்தியா. இறையாண்மை, சமதர்மம், ஜனநாயகத்தின் கருவூலமாகத் திகழ்கின்ற இந்திய அரசியலமைப்புச் சட்டம் இந்திய நாட்டின் ஒற்றுமைக்கு ஒரு வலுவான மைல்கல் என்றால் அஃது மிகையாகாது. இந்திய அரசியலமைப்பின் ஒருங்கிணைப்பிற்கு முக்கிய பங்காற்றியதோடு, நாட்டின் இறையாண்மைக்கு களங்கம் ஏற்படாதவாறு மொழிவாரியாக இந்திய மாநிலங்களைப் பிரித்து செயல்படுத்தி வெற்றி கண்ட **"இந்தியாவின் இரும்பு மனிதர்"** சர்தார் வல்லபாய் பட்டேல் - அவர்களின் பிறந்தநாளான அக்டோபர் 31-ம் நாளை ஆண்டு தோறும் தேசிய ஒருமைப்பாட்டு தினமாக நமது இந்தியநாடு சிறப்பித்து வருகிறது. இச்சூழலில் தேசிய ஒற்றுமை, ஒருமைப்பாடு, தொலைநோக்கு பார்வை இன்றும் நம் இந்திய மண்ணில் மலர்கிறதா என்பதை சற்று சிந்திப்போம்.

## வேற்றுமையில் ஒற்றுமை காணும் பாரதம்

ஒரு குடும்பம் துவங்கி சமூகம், நாடு என எதை எடுத்துக்கொண்டாலும் அங்கு ஒற்றுமை மேலோங்கி நிற்கும்போது அவை வளர்ச்சியின் இலக்கை நோக்கி பயணிக்கும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. இந்தியா பல்வேறு இன, மத, மொழி, கலாச்சார பின்னணியைக் கொண்டு பன்முகத்தன்மை கொண்ட நாடாக இருந்தபோதிலும் இந்திய மக்கள் அனைவரும் நாம் இந்தியர்கள் என்ற ஒற்றுமை உணர்வுடன் வாழ்ந்து வருகின்றனர்.

**செப்பு மொழி பதினெட்டுடையாள் - எனில்**
**சிந்தனை ஒன்றுடையாள்**

என்ற மகாகவி பாரதியாரின் கூற்றிற்கிணங்க இந்திய மக்கள் வேற்றுமையில் ஒற்றுமை காணும் தொலைநோக்குப் பார்வையுடன் வாழ்ந்து வருவது சிறப்புக்குரிய ஒன்றாக இருக்கின்றது. அதனால்தான் இந்தியா அனைத்துத் துறைகளிலும் அபரிமிதமான வளர்ச்சியை எட்டி வருகின்றது. இருப்பினும் பலதரப்பட்ட அரசியல் நிலைகளில், சூழல்களில் மாநிலங்களுக்கிடையேயும், சில சமூகங்களுக் கிடையேயும் பல்வேறு பிரிவினைகளும், வளர்ந்தோங்கி வருவதையும் நம்மால் மறுக்க முடியாது. இச்சூழலில், இந்தியப் பாகுபாடுகளும் குடிமக்கள் ஒவ்வொருவரும் பிரிவினை சக்திகளையும் இனம் கண்டு அவற்றை வேரறுக்கும் முயற்சியில் முனைப்புடன் ஈடுபடுவதோடு, எதிர்கால தலைமுறை யினருக்கும் ஒன்றுபட்டு வாழும் கலையை கற்றுக்கொடுக்க வேண்டியதும் காலத்தின் கட்டாயமாக மாறிவருகிறது.

## சமத்துவத்தில் பிறக்கும் மனிதம்

ஒரு நாட்டினுடைய மனித மாண்பைக் கட்டிக்காக்கும் அச்சாணியாகத் திகழ்வது சமத்துவம். சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற இந்திய அரசியலமைப்பு சட்டப்பிரிவு 14 இந்திய சமூகங்களின் பண்பட்ட வளர்ச்சிக்கு

உறுதுணையாக அமைந்திருக்கிறது. இருப்பினும் ஒருசில சமூகக் கட்டுக்கோப்புகளில் பல சூழல்களில் சமத்துவத்திற்கு எதிரான நிகழ்வுகள் அன்றாடம் அரங்கேறிக் கொண்டுதான் இருக்கின்றன. ஆனால், அதையும் கடந்து சமத்துவத்தை மக்களிடம் கட்டிக்காப்பதே நாட்டு தலைவர்களுடைய கடமையாக வேண்டும். ஆனால், சில சூழல்களில் சமத்துவத்தை கடைபிடிப்பதில் அவர்கள் தவறும்போது அதன் விளைவுகள் புரட்சிகரமானதாக, மாபெரும் போர்களாகக்கூட உருவெடுத்திருக்கின்றன என்பது வரலாற்று உண்மை. **“யாதும் ஊரே யாவரும் கேளீர்”** என்ற கணியன் பூங்குன்றனாரின் வரிகளுக்கிணங்க நாட்டுத் தலைவர்கள் உலகளாவிய பார்வையுடனும், சமத்துவ மனநிலையோடும் செயல்படும் போது நாட்டில் ஒற்றுமை சிறந்து விளங்கும். அதனால், நாடுகளுக்கிடையே போர்களற்ற அமைதியான சூழலைத் தக்க வைத்துக்கொள்வதோடு, வளமான மனிதவாழ்வுக்கும் வழிவகுக்க முடியும்.

**ஒற்றுமையில் மலரும் வலிமை**

ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற



திருமூலரின் வாக்கிற்கிணங்க அனைவரும் ஒன்றே என்ற கூட்டொருமை சிந்தனையோடு ஒன்றுபட்டு வாழும்போது அனைத்தும் நலமாகும். மனித சக்தியினால் மாபெரும் செயல்கள் பிறக்கும். அதனால் தனிமனித வளர்ச்சி மட்டுமன்றி, ஆக்கப்பூர்வமான சிந்தனைகளும், செயல்பாடுகளும் ஒட்டுமொத்த சமூதாயத்தின் வளர்ச்சிக்கும் நாட்டின் வளர்ச்சிக்கும் அடிகோலும். அண்டைநாடுகள் திரும்பிப் பார்க்கும் அளவுக்கு உலகளவில் இந்திய நாடு வல்லரசாக வலம் வரும்.

# இறைவன் நம்மை தேடி வருவார்

**நம் எண்ணங்களும்**
**உணர்வுகளும்**
**சிந்தனைகளும்**
**சொல்களும்**
**நம்மை சுற்றி உள்ள**
**மனிதர்களுக்கு**
**நல்லது செய்யுமெனில்**
**இறைவனை நாம்**
**தேட வேண்டியதில்லை**
**இறைவனே நம்மை**
**தேடி வருவார்**

**ம. டேவிட் டிலன்,**
முளகுமூடு.



# இயற்கை மருத்துவத்தின் தேவை

**Dr. D.Brindha,** BNYS, M.S. G.M.
Yoga Naturopathy Clinic, Thiruvattar.

இயற்கை மருத்துவம் எனப்படும் மருந்தற்ற மருத்துவமுறை மூலம் நேர்மறையான மன மற்றும் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்காக, இந்தியளவில் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர், 18ஆம் தேதி இயற்கை மருத்துவ தினம் அனுசரிக்கப்படுகிறது. இந்திய அரசின் ஆயுஷ் அமைச்சகம் நவம்பர் 18, 2018 அன்று அறிவித்தது. 1945 ஆம் ஆண்டு இதே நாளில்தான் மகாத்மா காந்தடிகள் அகில இந்திய இயற்கை சிகிச்சை அறக்கட்டளையின் வாழ்நாள் தலைவராக பொறுப்பேற்றார். மற்றும் இயற்கை சிகிச்சையின் நன்மைகள் அனைத்து வகுப்பினருக்கும் கிடைக்க செய்யும் நோக்கத்துடன் பத்திரத்தில் கையெழுத்திட்டார். நாடு முழுவதும் இயற்கை மருத்துவ விழிப்புணர்வு முகாம்கள், பட்டறைகள், கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகள் ஏற்பாடு செய்வதன் மூலம் இந்த நிகழ்வு கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு இயற்கை மருத்துவ தினம் கொண்டாட்டத்திற்கான கருப்பொருள் "**ஆரோக்கியமான முதுமை மற்றும் நீண்ட ஆயுளுக்கான இயற்கை மருத்துவம்**"ஆகும். இது மருந்து இல்லாத இயற்கை மருத்துவத்தின் மூலம் நேர்மறையான மனம் மற்றும் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டது.

நோயில்லாப் பெருவாழ்வு வாழ வேண்டும் என்பதுதான் அனைவரது விருப்பம். அதேநேரம் தாறுமாறாக மாறிக்கிடக்கும், இன்றைய வாழ்க்கை முறையாலும் துரித உணவுக்கலாச்சாரத்தினாலும் நோய் இல்லாத வாழ்வு என்பது பலருக்கு சவாலாகவே இருக்கிறது.

2025 ல் இயற்கை மருத்துவத்திற்கான தேவை அதிகரித்து வருகிறது. ஏனெனில் மக்கள் நவீன மருத்துவத்தின் பக்கவிளைவு



களைத் தவிர்த்து, இயற்கையுடன் இணைந்த, சமநிலையான சுகாதார அணுகுமுறையைத் தேடுகிறார்கள்.

### நவீன மருத்துவத்தின் சவால்கள்

இரசாயன மருந்துகளின் பக்க விளைவுகள், நோயின் காரணத்தை அணுகாத மருத்துவ முறைகள் போன்றவை இயற்கை மருத்துவத்தின் மீது மக்கள் அதிக நம்பிக்கை வைக்க வழிவகுத்துள்ளது.

### இயற்கையான வாழ்க்கைமுறையின் மீதான ஆர்வம்

இயற்கை மருத்துவமானது

இயற்கையோடு இணைந்த வாழ்க்கை முறையையும் நோய்த்தடுப்பு முறைகளையும் வலியுறுத்துவதால் அது மக்களுக்கு மிகவும் ஈர்க்கக்கூடியதாக உள்ளது.

**நோய் தடுப்பு மற்றும் நீண்ட ஆயுள்**

நோய்களைத் தடுப்பதிலும், உடல், மனம்,ஆன்மா மூன்றையும் நலமுடன் வைத்திருப்பதிலும் இயற்கை மருத்துவம் முக்கிய பங்கு வகிக்கிறது.

பாரம்பரிய மருத்துவ முறைகள் நவீன காலத்திலும் மக்களுக்கு நன்மை பயக்கும் என்பதற்கான ஆதாரங்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

**இயற்கை மருத்துவத்தின் ஐந்து ஒழுக்க நெறிகள்**

1. 2-8 லிட்டர் நீர் அருந்துதல்
2. இரண்டு முறை உணவு உண்ணுதல்.
3. வாரம் ஒருமுறையாவது ஒருநாள் உண்ணா நோன்பு.
4. ஒரு மணி நேரம் உடற்பயிற்சி மற்றும் யோகா பயிற்சி
5. தினம் இரு முறை உண்ணா நோன்பு.
6. இறை வழிபாடு ஆகியவை ஒரு மனிதனை, உடல் மற்றும் மனதைச் சுத்தப்படுத்தி ஆரோக்கிய உடல் மற்றும் தெளிந்த சிந்தனையை அழிக்கிறது.

இயற்கை மருத்துவத்தின் முக்கிய குறிக்கோள்கள், உடலின் இயற்கையான குணப்படுத்தும் திறனை மேம்படுத்துவதும், ஆரோக்கியமான வாழ்கைக் முறையின் மூலம் நோய்கள் வராமல் தடுப்பதும் ஆகும்.

★ ***உடலைச் சுத்தம் செய்தல் :*** உடலில் தேங்கும் நச்சுக்களை நீக்குவதன் மூலம் நோய்க்கான அடிப்படைக் காரணத்தை நீக்குகிறது.

★ ***நோய்த் தடுப்பு :*** ஆரோக்கியமான உணவு, சரியான உடற்பயிற்சி, மன அழுத்த மேலாண்மை போன்ற பழக்கவழக்கங்கள் மூலம் நோய்வராமல் தடுக்கிறது.

★ ***முழுமையான சிகிச்சை :*** உடல், மனம், உணர்ச்சி மற்றும் ஆன்மாவின் ஆரோக்கியத்தை ஒன்றிணைந்து சிகிச்சை அளிக்கிறது.

★ ***தன்னைக் குணப்படுத்தும் திறன்*** உடலின் உள்ளார்ந்த சுய குணப்படுத்தும் சக்தியை தூண்டி நோயை எதிர்க்கும் திறனை அதிகரிக்கிறது.

★ ***கல்வி மற்றும் பொறுப்புணர்வு*** நோயாளிகளுக்கு உடல்நலம் பற்றிய அறிவை அறிந்து, அவர்களின் ஆரோக்கியத்திற்கான பொறுப்பை அவர்களிடமே ஒப்படைக்கிறது.

★ ***சமநிலை ஏற்படுத்துதல் :*** இயற்கையின் ஐந்து கூறுகளை (பஞ்ச பூதங்கள்) அடிப்படையாகக் கொண்டு உடலின் சமநிலையை மீட்டெடுக்கிறது.

**சிகிச்சை முறைகள்**

- உணவுக்கட்டுபாடு சிகிச்சை
- உண்ணா நிலை சிகிச்சை முறை
- மண் சிகிச்சை
- நீர் சிகிச்சை
- மசாஜ்
- அக்கு பிரசர்
- அக்கு பஞ்சர்
- வண்ண சிகிச்சை
- காற்று சிகிச்சை
- காந்த சிகிச்சை

ஆழமான அறிவியலையும், இயற்கை கலந்த அனுகுமுறையையும் கொண்ட நம் பண்டைய தமிழ் மருத்துவ மரபுகளைக் காத்து, வளர்த்தெடுத்து, வருங்கால சந்ததியினருக்கு அதன் பலன்கள் கிடைக்கச் செய்வது நம் அனைவரின் கடமையாகும்.



# அமைதியும் வளர்ச்சியும்

**சேவியர்,** பரக்குன்று

உலகம் இன்று தொழில்நுட்பத்தில் பதினாறு கால் பாய்ச்சல் பாய்ந்து கொண்டிருக்கிறது. ஆனால் மனித நேயத்திலும், உண்மையான ஆன்மீகத்திலும் நொண்டியடிக்கிறது. நாடுகளெல்லாம் வளர்ச்சி என பேசுகின்றன. அவர்களின் வளர்ச்சி கரன்சிகளால் அளவிடப்படுகிறதே தவிர கருணையினால் அளவிடப்படவில்லை. காஸாக்களும் அரசுகளுக்கு "**காசு**"களே !

யுத்தங்களும், ஊழல்களும், ஆதிக்க சிந்தனைகளும், ஏழைகள் மீதான தாக்குதலும், எளியவர்கள் மீதான அதிகார நசுக்கல்களும், மதவெறி, இனவெறி போன்றவையும் தலைவிரித்தாடும் காலம் இது. அதனால் இது "**கடைசிக் காலம்**" என சிலர் சொல்வதும் உண்டு.

நீதியும், சமாதானமும் ஒன்றையொன்று முத்தமிடும் என்கிறது திருப்பாடல்கள் நூல். உண்மையான அமைதியும், வளர்ச்சியும் பிரிக்க முடியாதவை. அமைதிக்குச் சமாதிகட்டி உருவாக்கப்படும் வளர்ச்சிகள் மயானங்களே.

இயேசு சொன்னார் "**அமைதி ஏற்படுத்துவோர் பாக்கியவான்கள். அவர்கள் கடவுளின் மக்கள் எனப்படுவர்**" அமைதியை விரும்புவோர் அல்ல; அமைதியை ரசிப்போர் அல்ல; மாறாக அமைதியை ஏற்படுத்துவோர் – பாக்கியவான்கள்! உலகம் அதிகாரத்துக்கும், பேராசைக்கும் கம்பளம் விரிக்கிறது. நமது சிந்தனை வளர்ச்சியோடு சேர்ந்து அமைதியையும் உருவாக்குவதாகவே இருக்க வேண்டும்.

## 1. அமைதியே வளர்ச்சியின் அடிப்படை

அமைதியான நீர் நிலைகளில் தான் கால்நடைகள் தண்ணீர் அருந்தும். கொந்தளிக்கும் நீர் நிலைகளில் அவை தண்ணீர் அருந்துவதில்லை. அமைதியான சூழலில் தான் மரங்கள் வளரும். அதேபோலதான் மானுடத்தின் வளர்ச்சிக்கு அமைதியே அடிப்படை. அமைதியற்ற சூழலில் செல்வங்களெல்லாம் யுத்தங்களுக்கும், ஆயுதங்களுக்கும், சேதங்களைச் சரிசெய்வதற்குமே செலவாகும்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஜப்பானின் நிலை பழிவாங்குதல் எனும் நிலையிலிருந்து, மறு கட்டமைப்பு செய்தல் எனும் பார்வைக்குத் திரும்பியது. இருபது ஆண்டுகளிலேயே அது உலக பொருளாதாரத்தில் பெரும் சக்தி மிகுந்த நாடாய் உருமாறியது! கிறிஸ்தவர்களாகிய நாம் அமைதியை விதைக்கிறோமா இல்லை பிரிவினைகளைப் பதியமிடுகிறோமா? சிந்திப்போம்.

## 2. வழிகாட்டும் அமைதியின் அரசர்!

இறைமகன் இயேசுவை நாம் அமைதியின் அரசர் என்கிறோம். அவரது வாழ்க்கையே நமக்கான வழிகாட்டும் பாடம். அவரது அமைதி என்பது சத்தங்களைக் கண்டு விலகி ஓடியதல்ல. சத்தங்களிடையே பயணித்து அங்கே அமைதியை உருவாக்கியது!

இரைந்த கடலையே பயணித்து அதை அடக்குகிறார். எதிரிகளை மன்னித்து அவர்களின் வெறுப்புப் புயலைத் தணிக்கிறார். பிரிந்த இனங்களை அன்பினால் ஒட்ட வைக்கிறார். இயேசு கொண்டு வந்த வளர்ச்சி என்பது அமைதியின் நறுமணத்துடன் தான் வலம் வந்தது! அது சத்தங்களைக் கண்டு ஓடவில்லை, சத்தங்களிடையே வாழ்ந்து அமைதியை உருவாக்கியது.

நாம் கிறிஸ்துவைப்போல அமைதியை நிலைநாட்டுகிறோமா, இல்லை நமது வசதிக்காக ஒதுங்கி அமைதியாய் இருக்கிறோமா?

### 3. அமைதியான நிலங்களே வளர்ச்சியின் களங்கள்

சகோதரர் ஒன்றுபட்டு வாழ்வது எத்துணை நன்று, எத்துணை இனியது. என்கிறது திருப்பாடல்கள் நூல். அமைதியான சமூகங்களே, கல்வி, கண்டுபிடிப்புகள், வளர்ச்சிக்கான திட்டங்கள் போன்றவற்றில் கவனம் செலுத்தும். அமைதியற்ற நிலங்கள் யுத்தங்களோடு வாழ்க்கை நடத்தும், விட்டுக் கொடுத்தலும், பேராசை இல்லாமல் இருப்பதும் அமைதிக்கான அடிப்படைத் தேவைகள்.

அமைதியற்ற இடங்கள் தான் பிறரைப் பகடைக்காயாய்ப் பயன்படுத்தும், சமூக சீர்கேட்டுக்கு வழிவகுக்கும். பாபேல் கோபுரம் வீழ்ந்தது. அதன் கட்டுமானம் பலவீனமாய் இருந்ததால் அல்ல, அது செருக்கின் மீது கட்டப்பட்டதால்.

மனதுக்குள் அமைதி இல்லையேல், வளர்ச்சி என்பது வெறும் மாயையே. ஆன்மா அழிவுக்குள் செல்லும்போது, ஆதாயங்களால் என்ன பயன்? கிறிஸ்தவர்களாகிய நாம் நமது சமூகத்தை அமைதியின் நிலங்களாக்க முயற்சிகள் எடுக்கிறோமா?

### 4. மன்னிப்பு வளர வைக்கும்!

அமைதி எனும் செடிக்கான மிகச் சிறந்த உரம் மன்னிப்பு! வெறுப்பு சமூகங்களில் விஷத்தைத்தூவும். ஆனால் மன்னிப்பு சமூகங்களைக் கட்டியெழுப்பும். இயேசு தன் வாழ்நாள் முழுவதும் மன்னிப்பைப் போதித்தார், வாழ்ந்து காட்டினார். **“ஆத்துல போட்டாலும் அளந்து போடு”** என்பது உலக மொழி. அளக்காமலேயே மன்னிப்பு வழங்கு என்பதே தேவ மொழி.

நெல்சன் மண்டேலா எதிரிகளை மன்னித்து தென்னாப்பிரிக்காவைக் கட்டமைக்க களமிறங்கினார். அது தேசத்தில் பெரிய மாற்றத்தைக் கொண்டு வந்தது. மன்னிப்பு வளர வைக்கும், வெறுப்பு உலர வைக்கும்.

நீங்கள் ஏழைகளை நசுக்கி, அவர்களிடம் தானிய வரியாக வாங்கியதைக் கொண்டு நன்கு செதுக்கிய கற்களால் வீடு கட்டினீர்கள்; அந்த வீடுகளில் நீங்கள் வாழப் போவதில்லை என்கிறார் ஆமோஸ் இறைவாக்கினர். மற்றவரை நசுக்கி, ஏழைகளை ஒடுக்கி, இயலாதவர்கள் மேல் ஆதிக்கம் செலுத்தி உருவாக்கும் வளர்ச்சி என்பது வளர்ச்சியல்ல. மன வீழ்ச்சி.

நமது வளர்ச்சி நீதியின் பாதையில் இருக்கிறதா? இல்லை வளர்ச்சிக்காக நீதியை வளைக்கிறோமா?

### 5. திருச்சபை அமைதியான வளர்ச்சி!

ஆதித் திருச்சபை படுவேகமாய் வளர்ந்தது. காரணம் அங்கே அமைதியே மையமாய் இருந்தது. அனைத்தையும் அவர்கள் பகிர்ந்தார்கள், இணைந்து செபித்தார்கள். அங்கே பொதுநலம் பிரதானமாய் இருந்தது.

நம் நூற்றாண்டில் ருவாண்டாவில் நடந்த இனஅழிப்புக்குப் பிறகு கிறிஸ்தவ அமைப்புகள் ஒன்றிணைந்து தேசத்தின் காயங்களுக்குக் கட்டுப்போடும் பணியைச் செய்தன. மன்னிப்பையும் அன்பையும் பரிமாறி உதாரண வாழ்க்கை வாழ்ந்தன. ஆதித் திருச்சபையின் இயல்புகளை வெளிக்காட்டின.

திருச்சபை என்பது புனிதர்களின் பொருட்காட்சி சாலையல்ல! அது அமைதியை நிலைநாட்டும் பாடசாலை. எனக்குள் அமைதி இருக்கிறதா. **“என் அமைதியை உங்களுக்கு அளிக்கிறேன்”** என்ற இயேசுவின் அமைதி எனக்குள் இருக்கிறதா? அதை நான் திருச்சபையில் வெளிக்காட்டுகிறேனா? சமூகத்தில் நிலை நாட்டுகிறேனா? அன்னை தெரசாவின் அமைதியே அவருக்கான மாபெரும் பலமானது! வெற்றியானது. நாம் எப்படி என்பதைச் சிந்திப்போம்.

**முடிவாக :** அமைதியையும் வளர்ச்சியையும் நோக்கிய மானுடம் எனும்போது அது நாடுகளின் தலைவர்களுக்கானது மட்டுமல்ல. நம் ஒவ்வொருவருக்குமானது. நாம் எப்படி அமைதியை நிலைநாட்டுகிறோம். எப்படி பேதமற்ற சமூகத்தைக் கட்டியெழுப்ப பங்களிப்பு செய்கிறோம். எப்படி அத்தகைய வளர்ச்சிக்கு உதவுகிறோம் என்பதைச் சிந்திக்க அழைக்கப்படுகிறோம்.

**அமைதியை நாடுவோம்**
**அமைதியாய் வாழுவோம்.**



# சிக்கனம் தேவை இக்கணம்

சப்திகா

1924 ஆம் ஆண்டு அக்டோபர் 31 இத்தாலியின் மிலன் நகரில் நடைபெற்ற சர்வதேச சேமிப்பு வங்கிகளின் மாநாட்டில்




சிக்கனத்தின் முக்கியத்துவத்தை உலகிற்கு எடுத்துரைக்கும் வண்ணம் அக்டோபர் 31 உலக சிக்கன தினமாக கடைபிடிக்க முடிவு செய்யப்பட்டது. 1984 அக்டோபர் 31 அன்று முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார். அதைத் தொடர்ந்து இந்தியாவில் அக்டோபர் 30 உலக சிக்கன தினமாகக் கடைபிடிக்கப்படுகிறது. சிக்கனத்தின் முக்கியத்துவத்தை உலகிற்கு வலியுறுத்துவதும், எதிர்கால தேவைகளை சேமிப்பின்மூலம் வெல்வதுமே உலக சிக்கன தினத்தின் முக்கிய நோக்கமாகும்.

சிக்கனமும், சேமிப்பும் ஒரு குடும்பத்தின் வளர்ச்சிக்கு இரண்டு கண்களாக இருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால் சேமிப்பின் அடிப்படையே சிக்கனம் ஆகும். அரும்பாடுபட்டு சேர்த்த செல்வங்களை தேவையில்லாத செலவுகள் மூலம் விரயமாக்கி விடாமல் தடுப்பது மிகமிக அவசியம். வீண் செலவுகளால் ஏற்படுவது பொருள் இழப்புகள் மட்டுமல்ல. அந்த பொருளை ஈட்டுவதற்கு நாம் மேற்கொண்ட உழைப்பும், அதற்காக நாம் செலவிட்ட நேரமும் சேர்ந்தே விரயம் ஆகிறது. நாம் தேடிச் சேர்த்த செல்வங்களை சிதறவிடாமல் பாதுகாக்க, அதனை திறம்பட நிர்வகிக்க சிக்கனம் அவசியம்.

நம்மிடம் இருப்பதில் எவ்வளவு குறைவாக பயன்படுத்த முடியுமோ, அவ்வளவு குறைவாக பயன்படுத்துவது சிக்கனமாகும். சிக்கனம் என்றதும் நம்மில் பலருக்கும் உண்ணாமல் உறங்காமல் பொருள் சேர்க்க வேண்டுமா? இது என்ன முட்டாள்தனம் என்று தோன்றலாம். ஆனால் உண்மையில் அவ்வாறு செய்வது சிக்கனம் அல்ல கஞ்சத்தனம். சிக்கனத்திற்கும், கஞ்சத்தனத்திற்கும் உள்ள வேறுபாடு நூல் அளவே ஆகும்.

சிக்கனம் என்பது நமது வருமானத்தை விட குறைவாகச் செலவு செய்வது. நமது அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றை பூர்த்தி செய்த பின் மிஞ்சுவதில் தேவையற்ற ஆடம்பர செலவுகளை தவிர்த்து வாழ்வதே சிக்கனம் ஆகும்.

**"வருமானத்தை விட குறைவாக செலவு செய்ய கற்றுக் கொண்டால் அது ஒரு பெரிய ரசவாத ரகசியத்தை போன்றது"**, என்கிறார் அறிஞர் பிராங்க்லின். **"சிக்கனமும் ஒருவிதமான வருமானம்"**, என்கிறார் லெனிக்கா. அறிஞர் பென் அவர்களின் கூற்றுப்படி **"சிக்கனம் என்பது அனாவசியச் செலவுகளை ஒழிப்பது; தாராளம் என்பது தேவையுள்ளவர்களுக்கு உதவ, அந்தச் செலவினங்களை உபயோகிப்பதாகும்"**.

குடும்பத்தின் தேவைகளை சுருக்கி சிக்கனமாய் வாழும் பொறுப்பு கணவன் மனைவி இருவருக்கும் இருக்கிறது என்றாலும் அதிக பொறுப்பு மனைவியின் கைகளில் இருக்கிறது. குடும்ப பொருளாதாரம் என்பது பெண்களின் கைகளில் தான் இருக்கிறது. அதனால்தான் இன்று உள்ளூர் வியாபாரம் முதல் வெளிநாட்டு வர்த்தகம் வரை அனைத்து விளம்பரங்களும் பெண்களை மையப்படுத்தியே வருகிறது. புடவை வியாபாரம் முதற்கொண்டு அனைத்தும் பெண்களை குறிவைத்து நகர்த்தப்படுகின்றது. நாள் தவணை, வாரத் தவணை, மாத தவணை என விதவிதமான மாய வலைகள் பெண்களைப் சுற்றி பின்னப்படுகின்றன. இதில் சிக்குண்டு சின்னாபின்னமாகும் குடும்பங்கள் பல.

ஆசையே துன்பத்திற்கு அடிப்படை என்பது புத்தரின் கூற்று. அதை உணர்ந்து தேவையற்ற ஆடம்பர காரியங்களில் ஈடுபடுவதை தவிர்த்து, பிறரைப்போல் அல்லது பிறரை விடவும் ஆடம்பரமாக வாழ வேண்டும் என்கிற ஒப்பீட்டு மனநிலையை தவிர்த்து வருமானத்திற்கு ஏற்ப செலவு செய்து குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்கள்தான் குடும்ப பொருளாதாரத்தின் முன்னேற்றத்திற்கு ஆணிவேராக திகழ்கின்றனர்.

உலகப் பொதுமறையாம் திருக்குறளை எழுதிய திருவள்ளுவரும் **"வாழ்க்கைத் துணைநலம்"** என்ற அதிகாரத்தில் கணவன் சம்பாதித்த செல்வத்திற்கு ஏற்றவாறு வாழ்ந்து அதனை திறம்பட கையாண்டு தகுந்த முறையில் வாழ்பவளே சிறந்த வாழ்க்கைத் துணை என்று சிக்கனத்தின் மேன்மையை **"மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான் வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"**, என்ற குறளின் மூலம் தெளிவுபடுத்துகிறார். சிக்கனத்தின் முக்கியத்துவத்தை உணராமல் மனம்போல் செலவழிப்பவர்களின் வாழ்வு எத்தகையதாகும் என்பதற்கு சிறந்த உதாரணம் விவிலியத்தில் கூறப்பட்டுள்ள ஊதாரிமைந்தன் கதை. தந்தையிடமிருந்து சொத்துக்களை பிரித்து வாங்கிவிட்டு, நண்பர்களுடன் சேர்ந்து தன் மனம்போல் சுற்றித்திரிந்து செலவழித்து அனைத்தையும் இழந்து மீண்டும் வெறும் கையனாய் தந்தையிடம் திரும்பும் ஊதாரி மைந்தனின் நிலை போலவே ஆடம்பர வாழ்வில் நாட்டம் கொண்டு தேவையற்ற பொருட்களை வாங்கி குவிப்பதில் வரவுக்கு மீறி செலவு செய்பவர்களின் வாழ்வும். ஆடம்பரமும், வீண் செலவுகளும் மனிதனின் வாழ்வை அழித்துவிடும் கருவிகள் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

சிக்கனமாக வாழ்வதன் மூலம் தேவையற்ற கடன் சுமைகளை தவிர்க்கலாம். குடும்பங்களில் ஆரோக்கியமான நிதி மேலாண்மையை கையாளலாம். எதிர்பாராத மருத்துவ செலவினங்களுக்காக யாரிடமும் கையேந்தாமல் நாமே எதிர்கொள்ளலாம். தேவையற்ற செலவுகளை குறைப்பதன் மூலம் நம் எதிர்காலத்தை பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல் நாட்டின் பொருளாதாரத்தையும் பாதுகாக்கலாம்.

சிக்கனம் என்பது நமது பொருள் தேவைகளில் மட்டும் கடைப்பிடித்தது அல்ல; இயற்கை நமக்கு அளித்த அருட் கொடைகளான வளங்களை பயன்படுத்துவதிலும் சிக்கனம் தேவை. நாம் ஆண்டு அனுபவித்த இயற்கையை, நமது வளங்களை பாதுகாக்க முடியும்.

ஆப்பிரிக்காவின் பூர்வகுடிகளில் மிகப் பழமை வாய்ந்தவர்கள் புதர் மக்கள் (புஷ்மென்). நாடோடிகளான இவர்கள் கலஹாரி பாலைவனப் பகுதியில், நமீபியா, போட்ஸ்வானா நாடுகளில் வாழும் சான் மக்கள் என்று அறியப்படுகின்றனர். இவர்கள் இயற்கையின் பாதுகாவலர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் நாடோடி மக்கள் என்பதால் நீர் இருக்கும் இடங்களை தேடி செல்பவர்கள். வறண்ட பகுதிகளில் கூட நீர் இருக்கும் இடங்களை கண்டறியும் ஆற்றல் பெற்றவர்கள். ஈரப்பதமுள்ள மணற்பாங்கான இடங்களில் ஆழக்குழி தோண்டி அதனுள் நாணல் தண்டுகளை செலுத்தி தண்ணீரை உறிஞ்சி எடுத்து குடிப்பதோடு, தீக்கோழி முட்டையின் ஓடுகளிலும் சேமித்து வைப்பார்கள். இதன் மூலம் நீரின் தேவையையும் முக்கியத்து வத்தையும் நமக்கு உணர்த்தும் புதர் மக்கள் தண்ணீரை தேவைக்கேற்ப சிக்கனமாக பயன்படுத்தி நமது வருங்கால சந்ததியின ருக்காக சேமித்து வைக்க வேண்டும் என்ற பேருண்மையை வலியுறுத்துகின்றனர்.

தண்ணீர், மின்சாரம் போன்ற இயற்கை வற்றை தேவைக்கேற்ப சிக்கனமாக பயன்படுத்துவதன் மூலம் எதிர்கால தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியும். இயற்கை வளங்களை வீணாக்காமல், சிக்கனமாய் பயன்படுத்தும் பழக்கம் வீட்டில் இருந்தே தொடங்க வேண்டும். எங்கும் எதிலும் சிக்கனம் தேவை என்பதை குழந்தைகளின் மனதில் பதிய வைக்க வேண்டும்.

எறும்புகள் மழை காலத்தை எதிர்கொள்ள உணவு சேமிப்பதைபோல நாமும் நமது எதிர்காலத் தேவைகளுக்காக சிக்கனமாய் செலவு செய்து சேமிப்பை பெருக்குவோம். சிறுதுளி பெருவெள்ளம் என்ற கூற்றிற்கிணங்க சிறு சிறு செயல்களிலும் சிக்கனத்தை கடைப்பிடித்து இன்றே நமது சேமிப்பு கணக்கை தொடங்குவோம்.

# குமரி மாவட்டமும் புற்றுநோய் ஆபத்தும்

**Dr. J. R. Jeena Josephin,**
MBS Ms Mch (so), PIAGES,FMAS, DMAS,
புற்றுநோய் அறுவை சிகிச்சை நிபுணர்

கன்னியாகுமரி மாவட்டத்தில் புற்றுநோயின் தாக்கம் அதிகரித்து வருகின்றது.



தமிழ்நாடு சர்வதேச புற்றுநோய் பதிவு திட்டம் (TNCIR) 2018-ஆம் ஆண்டின் கணக்கின்படி கன்னியாகுமரி மாவட்டத்தில் புதிய புற்றுநோயர்களின் எண்ணிக்கை 2326 (ஆண்கள் 1,120, பெண்கள் 1,206) புதிய எண்ணிக்கை 2022-ஆம் ஆண்டில் 2743-ஆக உயரலாம் என்றும் கணிக்கப்பட்டது. தமிழ்நாடு மாநிலத்தில் மொத்த நோய் தோன்றல் விகிதம் சுமார் 96.1/100,000 மக்கள் கன்னியாகுமரி மாவட்டத்தின் CIR சுமார் 96.1/100,000 மக்கள் இது மாநில சராசரியை கடந்துள்ளது.

**எதனால் புற்றுநோய் கன்னியாகுமரி மாவட்டத்தில் அதிகமாக உள்ளது என்று சிந்திக்க வேண்டும் இதற்கு முக்கிய காரணம் பின்வருமாறு**

1. இயற்கை பின்னணி கதிர்வீச்சு (High Natural Background Radiation) அதிகமாக கடலோரப் பகுதிகளில் காணப்படுகிறது. தோரியம் மற்றும் யுரேனியம் கொண்ட கதிரியக்கக் கனிமங்கள் நிறைந்த மோனோ சைட் மணல் கடற்கரையோர

பகுதிகளில் காணப்படுகிறது. நீண்ட காலமாக அதிக மின்னணிக் கதிர்வீச்சுக்கு ஆளாவதால் புற்றுநோய்வர காரணமாக உள்ளது. இந்த கதிர்வீச்சானது டிஎன்ஏ வை சேதப்படுத்தி புற்றுநோய் செல்கள் உருவாக வழி வகுக்கும். சில ஆய்வுகள் கதிர்வீச்சுக்கும் புற்றுநோய்க்கும் இடையே நேரடியான தொடர்பு இல்லை என்றும் கூறுகின்றன. இதனால் அதிக ஆய்வுகள் இதன் அடிப்படையில் நடத்த வேண்டிய அவசியம் உள்ளது

2. இன்னொரு முக்கியமான காரணம் புகையிலை பயன்படுத்துதல், புகை பிடித்தல், புகையில்லா புகையிலை, கரைக்கக்கூடிய புகையிலை, மெல்லும் புகையிலை என எந்த வகையில் புகையிலை எடுத்துக் கொண்டாலும் புற்றுநோய் வருவதின் அளவு அதிகரிக்கும்.
3. தொழிற்சாலைகளிவிருந்து வெளியேற்றப் படும் கன உலோகமாசு காரணமாக கடல் நீர் மாசுபடுகிறது. இதனால் சில வகை மீன்கள் மாசுபடுகிறது அதை உண்பதன் மூலம் புற்றுநோய் வரலாம்.
4. விவசாயத்தில் பயன்படும் பூச்சிக்கொல்லி மருந்துகள் மற்றும் ரசாயன உரங்கள் புற்றுநோயை உண்டாக்கும் வாய்ப்புள்ளது என உலக சுகாதார நிறுவனம் சுட்டிக்காட்டுகின்றது.
5. நெகிழி (Plastic)-ல் உள்ள இரசாயனங்கள் மற்றும் சூடான அல்லது குளிர்ச்சியான உணவுப் பொருட்களை சேமிக்கும் போது பிளாஸ்டிக்கில் இருந்து வெளியாகும் நச்சுப்பொருட்கள் புற்றுநோய் உள்ளிட்ட பல நோய்களுக்கு வழிவகுக்கும்.
6. மதுப்பழக்கம் உடல்பருமன் ஊட்டச்சத்து குறைபாடு கொண்ட காரணங்களால் புற்றுநோய் ஏற்படலாம்.
7. இன்னும் பல காரணங்கள் புற்றுநோய் வருவதற்கு காரணமாக உள்ளது.

## புற்றுநோய் வருவதை தடுக்க நாம் என்ன செய்ய வேண்டும்?

இயற்கை சூழல் ஒரு காரணமாக இருந்தாலும் நம்மால் தவிர்க்க முடிகின்ற காரணிகளை தவிர்த்து, செயல்படுத்த வேண்டிய காரணிகளை செயல்படுத்தி புற்றுநோய் வருவதைத் தடுக்கலாம்.

1. புகையிலை பயன்படுத்துதல், மதுப்பழக்கம் தவிர்க்கலாம்.
2. உணவில் பழங்கள், காய்கறிகள் மற்றும் ஊட்டச்சத்து நிறைந்த பொருள்கள் சேர்த்துக் கொள்ள வேண்டும்.
3. உடற்பயிற்சி மிகவும் முக்கியமானது.
4. விவசாயத்தில் இயற்கை உரங்கள் பயன்படுத்த முயற்சிக்க வேண்டும்.
5. காற்று நீர் மாசுபடுவதை நாம் தடுக்க முயற்சிக்க வேண்டும்.
6. வீடுகளில் பிளாஸ்டிக் டப்பாவில் உணவுப் பொருட்கள் சேமிப்பதை தவிர்க்க வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆண்களுக்கு வாய் புற்றுநோய், நுரையீரல் புற்றுநோயும், பெண்களுக்கு மார்பக புற்றுநோய், கர்ப்பப்பைவாய்புற்றுநோயும் அதிகமாக காணப்படுகின்றது.

புற்றுநோய் ஆரம்ப கட்டத்தில் கண்டுபிடித்தால் குணப்படுத்த முடியும் இதற்கு நோய் கண்டறிதல் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும். பெண்களுக்கு (Mammogram Test) மற்றும் (Pap Smear Test) செய்து கொள்வது மிகவும் முக்கியமான ஏதாவது அறிகுறி ஒரு (Symptoms) மாதத்திற்கு மேல் இருந்தால் உடனே மருத்துவரிடம் சென்று பரிசோதனை செய்துகொள்ளவேண்டும். கன்னியாகுமரி மாவட்டம் ஒரு புற்றுநோய் இல்லாத ஒரு சமுதாயமாக மாற நாம் அனைவரும் முயற்சி எடுக்க வேண்டும்.

**"ஆரம்பகால கண்டறிதல் உயிரைக் காப்பாற்றுகிறது"**

# பணிக்குழுக்களின் சிறப்பு செயல்பாட்டு அறிக்கைகள்
## குழித்துறை மறைமாவட்டம்

## 1. கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு
### மறைக்கல்வி பணிக்குழு

**BTCT பயிற்சி**

- மறையாசிரியர்களுக்கான அடிப்படை மறைப்பயிற்சியின் (BTCT) 26-ம் பயிற்சி பாசறை டிரினிட்டி மேய்ப்புப்பணி நிலையம் பயிற்சி அரங்கில் நடைபெற்றது. 50 பேர் பங்கேற்றனர். பயிற்சியின் நிறைவில் பணிக்குழுக்களின் ஒருங்கிணைப்பாளர் அருள்பணி. N. மார்ட்டின் அவர்கள் சிறப்பாக பயிற்சி பெற்ற மறையாசிரியர்களை வாழ்த்தி சான்றிதழ் வழங்கினார்கள்.
- முளகுமூடு, மாத்திரவிளை, புத்தன்கடை ஆகிய மறைவட்டங்களில் பொதுக் குழுக்கள் நடைபெற்றது. மறையாசிரியரின் மனநிலை பற்றி திரு. பிரின்ஸ் அவர்கள் பயிற்சி வழங்கினார்கள். 110 மறையாசிரியர்கள் பங்கேற்றார்கள்.

### திருவழிபாட்டு பணிக்குழு

- வேங்கோடு, மாத்திரவிளை ஆகிய மறைவட்டங்களில் பொதுக்குழுக்கள் நடைபெற்றது. சங்க ஏடுகள், வழிபாட்டில் பொருளுணர்ந்து பங்கேற்க ஆகிய தலைப்புகளில் அருள்பணி. ஷைன், செல்வி. எமல்டா ஆகியோர் பயிற்சி வழங்கினார்கள். 28 பேர் பங்கேற்றனர்.

### விவிலியப் பணிக்குழு

- செப்டம்பர் 06, 2025 மாத்திரவிளை மறைவட்டப் பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. விவிலிய மாத திட்டங்கள் பற்றி பேசப்பட்டது. 26 பேர் பங்கேற்றனர்.

## 2. சிறார் பணிக்குழு

- புத்தன்கடை, வேங்கோடு, மாத்திரவிளை, திரித்துவபுரம், காரங்காடு ஆகிய மறைவட்டங்களில் பொதுக்குழுக்கள் நடைபெற்றது. செய்கைப் பாடல் பயிற்சி நடைபெற்றது. 166 சிறார் மற்றும் வழிகாட்டிகள் பங்கேற்றனர்.
- 05.09.2025 அன்று முளகுமூடு மறைவட்டம் தக்கலை மண்டல மாநாடு புனித செபஸ்தியார் அரங்கம் மாடத்தட்டுவிளையில் வைத்து நடைபெற்றது. **“இயேசுவின் இலட்சிய பாதையில் பயணித்து நிறைவாழ்வு அடையும் சிறார்களாக”** என்ற தலைப்பில் அருட்பணி. கிளாசின் பயிற்சியளித்தார். 147 பேர் பங்கேற்றனர்.
- 30.09.2025 அன்று வேங்கோடு மறைவட்டம் வேங்கோடு மண்டல மாநாடு மாதாபுரம் புனித காணிக்கை அன்னை சமுகநலக்கூடத்தில் வைத்து நடைபெற்றது. நிறைவாழ்வை நோக்கி பயணிக்கும் சிறார்கள் என்ற தலைப்பில் அருட்பணி. பிறைட் சிங் அவர்கள் பயிற்சியளித்தார். 336 பேர் பங்கேற்றனர்.
- 05.09.2025 அன்று மாத்திரவிளை வட்டார சிறார் இயக்கம் சார்பாக சாலையோர ஏழைகள் 65 பேருக்கு உணவளிக்கப்பட்டது.

## 3. இளைஞர் பணிக்குழு

- திரித்துவபுரம், மாத்திரவிளை, புத்தன்கடை, காரங்காடு, முளகுமூடு ஆகிய மறைவட்டங்களில் பொதுக்குழுக்கள் நடைபெற்றது. 112 பேர் பங்கேற்றனர். சமூக பகுப்பாய்வு, பாலின சமத்துவம், மாணவர்கள் சந்திக்கும் சவால்கள், செயற்கை நுண்ணறிவு, எழுத்தாளர் பயிற்சி ஆகிய தலைப்புகளில்

திரு. ரெஞ்சித், செல்வி. எமல்டா, செல்வி. லாவண்யா, முனைவர் ஜெமிலா றோஸ், திரு. மைக்கேல்ராஜ் ஆகியோர் பயிற்சி அளித்தார்கள்.

## இளம் கிறிஸ்தவ மாணவர் இயக்கம்

- மாத்திரவிளை, வேங்கோடு, முளகுமூடு, புத்தன்கடை, காரங்காடு, திரித்துவபுரம் ஆகிய மறைவட்டங்களில் பொதுக் குழுக்கள் நடைபெற்றது. 196 மாணாக்கர் பங்கேற்றனர். பாலின சமத்துவம், வீதி நாடகம், புதிய கல்வி கொள்கை,தலைமைப்பண்பு, பெண்குழந்தைகள் பாதுகாப்பு, சமத்துவம் ஆகிய தலைப்புகளில் செல்வி.எமல்டா, திரு. றோஸ்றோபின், திரு. பெனடிக்ட் பென்சிகர், திரு. ரெஞ்சித், செல்வி யுதனிஹா, திரு. பென்சிகர் ஆகியோர் பயிற்சி அளித்தார்கள்.

## உயர்கல்வி வழிகாட்டல் பயிற்சி

- 27.09.2025 அன்று அன்னை வேளாங்கன்னி கல்லூரி தொலையாவட்டத்தில் வைத்து நடைபெற்றது. முனைவர். லியோ பிரைட்சிங் அவர்கள் உயர்கல்வி வழிகாட்டல் பற்றி பயிற்சி வழங்கினார்கள். வேங்கோடு, மாத்திரவிளை மறைவட்டங்களிலிருந்து 290 பேர் பங்கேற்றனர். மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருள்பணி. S. சேவியர் பெனடிக்ட் பங்கேற்று வாழ்த்தினார்கள்.
- 27.09.2025 அன்று மார்னிங் ஸ்டார் தொழில்நுட்ப கல்லூரி சுங்கான்கடையில் வைத்து நடைபெற்றது. திரு. பிஜுமோன், அருள்பணி. செபாஸ்டின் ஆகியோர் உயர்கல்வி வழிகாட்டல் பற்றி பயிற்சி வழங்கினார்கள். காரங்காடு மறைவட்டத்திலிருந்து 188 பேர் பங்கேற்றனர். மறைமாவட்ட ஆயர் ஆல்பர்ட் அவர்கள் பங்கேற்று வாழ்த்தினார்கள்.

## 4. பட்டியலினத்தார் பணிக்குழு

- காரங்காடு, புத்தன்கடை ஆகிய மறைவட்டங்களில் பொதுக்குழு கூட்டங்கள் நடைபெற்றது. அரசியல் விழிப்புணர்வு பற்றி பயிற்சி நடைபெற்றது. 18 பேர் பங்கேற்றனர்.

## 5. தொழிலாளர் பணிக்குழு

- 21.09.2025 மறைமாவட்ட பொதுக்குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி ஆரோக்கியபுரம் புனித ஆரோக்கியநாதர் ஆலய கலையரங்கில் வைத்து நடைபெற்றது. **“ஒருங்கிணைவோம் உரிமைகளைப் பெறுவோம்”**, என்ற தலைப்பில் அருள்பணி. M.C.ராஜன் அவர்களால் பயிற்சி வழங்கப்பட்டது. சுமார் 120 பேர் வருகைத்தந்தார்கள்.
- வெட்டுவெந்தி, நுள்ளிவிளை(கா) அருளானந்தபுரம் ஆகிய இடங்களில் வைத்து மறைவட்ட கூட்டங்கள் நடைபெற்றது. இதில் 48 பேர் வருகைத்தந்தார்கள் நலவாரியம் பற்றி திருமதி. ஜெயினி பயிற்சி வழங்கினார்கள்.

## 6. சமூகத்தொடர்பு பணிக்குழு

- எதிர்நோக்கின் விடியல் அன்னை மரியா என்ற அன்னையின் பிறப்பு தின நிகழ்வும், காரங்காடு வட்டார ஒப்பரவு தினம் என்ற நிகழ்வும் மற்றும் விவிலிய வார சிறப்பு நிகழ்ச்சியாக விவிலிய கதைகள் ஆகிய நிகழ்வுகள் ஒளிப்பதிவு செய்யப்பட்டு மாதா தொலைக்காட்சி மற்றும் தேனருவி You tube Channel-ல் ஒளிபரப்பப்பட்டது.
- செப்டம்பர் மாதம் முழுவதும் அன்றாட இறைவார்த்தை செபங்கள், இறை ஒளியில் நிறைவாழ்வு என்ற அன்றாட வாசகக் குறிப்புகள், புனிதர்கள் வரலாறு, இறை சிந்தனைகள், முக்கியத் தினங்கள் மற்றும் சிந்தனைகளை உள்ளடக்கிய Poster மற்றும் கத்தோலிக்கப் பாடல்கள் தயாரித்து தினமும் Whatsapp குழுவில் பகிரப்படுகின்றது.

## 7. பெண்கள் பணிக்குழு

- புத்தன்கடை, வேங்கோடு, முளகுமூடு, மாத்திரவிளை, காரங்காடு ஆகிய மறைவட்டங்களில் பொதுக்குழு கூட்டங்கள் நடைபெற்றது. 50 பேர் பங்கேற்றனர்.
- 08.09.2025 அன்று திரித்துவபுரம் மறைவட்ட மாநாடு நடைபெற்றது. 75 பேர் பங்கேற்றனர். அருள்பணி. அனீஸ் அவர்கள் நற்குழந்தை வளர்ப்பில் பெற்றோரின் பங்குபற்றி பயிற்சி வழங்கினார்கள்.
- மறைமாவட்ட கருத்தாளர் பயிற்சி 28.09.2025 அன்று டிரினிட்டி மேய்ப்புப்பணி மையத்தில் வைத்து நடைபெற்றது. 10 பேர் பங்கேற்றனர். பணிக்குழுவின் லட்சியமும் நோக்கமும் பற்றி தமிழக செயலர் அவர்கள் பயிற்சி வழங்கினார்கள்.

## 8. நற்செய்தி பணிக்குழு

- திக்கணங்கோடு தியான இல்லம், நட்டாலம், ஆகிய திருத்தலங்களில் இரவு விழிப்பு செபம் மற்றும் வெட்டுமணி, கடையால், பரக்குன்று, நல்லாயன்புரம், குழிவிளை, சிதறால் ஆகிய பங்குகளில் நற்செய்தி கொண்டாட்டங்கள் நடைபெற்றது.

## 9. குடும்பநலம் பணிக்குழு

- திருமண பதிவு செய்தவர்கள் : 08
- திருமண பயிற்சி முடித்தவர்கள் : 83 பேர்
- 28.09.2025 மறைமாவட்ட கருத்தாளர்களுக்கு அருள்சகோதரி. அமலமேரி அவர்கள் இன்றைய குடும்பங்கள் பற்றி பயிற்சி வழங்கினார்கள். 30 பேர் பங்கேற்றனர். புதிய புத்தக குழுவுக்கான உயர்மட்ட குழு கூட்டம் 23.09.2025 அன்று டிரினிட்டி மேய்ப்புப்பணி அலுவலகத்தில் நடைபெற்றது. 9 பேர் பங்கேற்றனர்.

## 10. அன்பிய பணிக்குழு

- முளகுமூடு, மாத்திரவிளை, திரித்துவபுரம் வேங்கோடு ஆகிய மறைவட்டங்களில் பொதுக்குழு நடைபெற்றது. 185 பேர் பங்கேற்றனர்.
- 20.09.2025 பள்ளியாடி செயல்தளப் பயிற்சி பள்ளியாடியில் நடைபெற்றது. வேதியர் பேபிகமலா அவர்கள் அன்பியத்தின் எதார்த்தநிலை, சவால்கள், நிர்வாகிகள், கடமைகள், பணிகள் பற்றி பயிற்சி வழங்கினார்கள். 17 நபர்கள் பங்கேற்றனர்.
- 27.09.2025 அன்று மறைமாவட்ட அன்பியப் பணிக்குழுவின் கருத்தாளர் பயிற்சி டிரினிட்டி மேய்ப்புப்பணி மையம், உண்ணாமலைக்கடையில் நடைபெற்றது. இயக்குநர் அருட்பணி ஆல்வின் விஜய் அவர்கள் அன்பியம் என்றால் என்ன? ஏன்? எதற்கு? எப்படி? ஏன்ற சிந்தனையில் பயிற்சி வழங்கினார்கள். 22 பேர் பங்கேற்றனர்

## நலத்திட்ட உதவிகள்

- கல்விக்காக, முதியோர் பராமரிப்புக்காக, திருமணத்திற்காக, மருத்துவ செலவிற்காக பங்கு, ஓருங்கிணையம் சார்பாக ரூ.24,42,300/- வழங்கப்படடது.

### 11. சிறைப் பணிக்குழு

- மறைமாவட்ட பொதுக்குழு 26.09.2025 மார்த்தாண்டத்தில் நடைபெற்றது. 17 பேர் பங்கேற்றனர்.
- போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு பாளையங்கோட்டை சிறையில் இருக்கும் இல்லவாசியின் மனைவியை சந்திக்க அனுமதி பெற்று கொடுக்கப்பட்டது.

அருள்பணி. **நீ. மார்ட்டின்,**
பணிக்குழுக்களின் ஒருங்கிணைப்பாளர்.

# Engagements of the Bishop: October 2025

| Date | Event | Place | Time |
|---|---|---|---|
| 01 | Contact Visit & Feast Mass | Melpuram | 05.30 pm |
| 02 | Conference for Teachers | | 10.00 am |
| | Confirmation Mass | Vellayambalam | 06.00 pm |
| 03 | Graduation Day at Morning Star Polytechnic College | Chunkankadai | 10.00 am |
| | Contact Visit & Confirmation Mass | Packiapuram | 05.00 pm |
| 04 | Contact Visit & Confirmation Mass | Manalikuzhivilai | 09.30 am |
| 05 | Contact Visit & Confirmation Mass | Panavilai | 09.00 am |
| 08 | Memorial Mass | Dindugal | 10.00 am |
| 07 | Curia | Bishop's House | 09.30 am |
| 10 | James Tombeur Memorial Mass | Chunkankadai | 07.00 am |
| | Confirmation Mass | Kanjiracode | 06.00 pm |
| 11 | Seminar for Bank Staff<br>School Building Opening and Mass | <br>Mukkalampadu | 09.30 am<br>11.00 am |
| 12 | Contact Visit & Feast Mass | Konamkadu | 08.30 pm |
| | Legion of Mary Mass | Thirithuvapuram | 04.30 pm |
| 14 | Curia | Bishop's House | 09.30 am |
| | Installation of Mammography at St. Xavier's hospital | Chunkankadai | 03.00 pm |
| | Holy Mass and Inauguration of Special Finance Committee | Chunkankadai | 05.00 pm |
| 18 | Finance Committee | Bishop's House | 03.00 pm |
| 19 | Contact Visit & Confirmation Mass | Yettacode | 09.00 am |
| 19 | Retreat for Priest begins ( 1st Batch) | | 07.00 pm |
| 25 | Mass for Elderly People - Thirithuvapuram Vicariate | | 11.30 am |
| 26 | Retreat for Priest begins ( 2nd Batch) | | 07.00 pm |

Reg. No : 0740

# GM

## YOGA & NATUROPATHY CLINIC

## ஞானமணி நினைவு

**யோகா மற்றும் இயற்கை மருத்துவமனை**

திருவட்டார்


**Dr.BRINDHA BNYS**

94427 11782


- யோகா சிகிச்சை
- உணவு சிகிச்சை
- எடை இழுப்பு திட்டம்
- அனைத்து வயதினருக்கும் வழக்கமான யோகா வகுப்புகள்
- மூலிகை மருந்துகள்
- ஓசோன் சிகிச்சை
- அக்கு பஞ்சர்
- அக்கு பிரஷர்
- பிசியோ தெரபி
- நீர் சிகிட்சை
- நீராவி குளியல்

**SPECIAL TREATMENT FOR LADIES**


MASSAGE


ACUPUNCTURE


PHYSIOTHERAPY


STEAM BATH


HYDROTHERAPY


ACUPRESSURE

## OTHER TREATMENTS


HERBAL MEDICINE


DIET THERAPY



OZONE THERAPY


YOGA

Date of Publishing : **20-10-2025**
Puthia Thedal Registered with Register og New Papers of India
Reged No. TNTAM/2010/35944 KKI/92/**2023 - 2025** Poster on 19th & 20th of every month at Mulagumoodu Post Office




Edited & Published by **Rev. Fr. R. Paul Richard Joseph** on behalf of Diocese of Kuzhithurai
Bishop's House, Unnamalaikadai, Marthandam, Post Box No. 1, Pin - 629 179.
Printed at Delta Offset Printers, Vellicode